திராவிடநாடு

10—5—59 | வார வெளியீடு | விலை 16 காசு

புதிய பாடம்...?

[சா. சதாசிவம்]

ஒட்டுமுறை நல்லதென்று சொல்லி விட்டு
மாட்டைவிட்டுத் தொல்லைதந்த ஆளுங் கட்சி
வாட்டமதைப் போக்கவில்லை; வரிகள் போட்டு
வறுமைக்கு வித்திட்டார்! சென்னை விட்டு
ஊட்டியிலே உல்லாசம் பெறுவ தற்கு
ஊர்வரியைக் கரைக்கின்ற திட்டம் போட்டார்!
போட்டியிட்ட நம்மைக்கண்டு பொருமை கொண்டு
ஆட்டமெலாம் ஆடினார்கள்! அடைந்த தென்ன?

சென்னையிலே கண்ணியத்தை மறந்தி ன்னல்
செய்ததை எண்ணினாலும் குமுறும் நெஞ்சம்!
இன்னலதைப் பொறுத்தோம்நாம்! எதையும் தாங்கும்
வைரநெஞ்சம் கொண்டதினால் வெற்றி பெற்றோம்!
அன்னைமனம் குளிர்கின்ற அரிய வெற்றி
அதுபற்றி எண்ணுகின்ற உள்ளம் துள்ளும்!
சென்னைநகர் அளித்துவிட்ட 'புதிய' பாடம்
செந்தமிழை நினையாத 'அவர்'க ளுக்கு!

மந்திரிக்கும் மற்றவர்க்கும் ஒன்று சொல்வேன்
மக்களெலாம் விழித்துவிட்டார்! தூங்க வில்லை!
சிந்தையிலே கொள்ளுங்கள்! புதிய எண்ணம்
பூத்துவரும் புதியநிலை கண்டு வீணாய்ச்
சிந்துபாடிச் சினங்கொண்டு தூற்றி விட்டால்
சீர்திருத்தக் கழகமென்ன அழிந்தா போகும்?
செந்தமிழர் தலைநகரில் கழகம் பெற்ற
வெற்றிகண்டு எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்!

'உதகை' தரும் செய்தி!

—[O●O]—

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். இங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் வரவேற்பு கொடுக்கப்பட்டதாக செய்தி வந்தது. அதை விளக்க விரும்புகிறேன்.

இங்கு நகர மன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடைந்துள்ளது. 28-இடங்களுக்கு 14-இடங்களில் காங்கிரஸ். இரண்டு தி. மு. கழகம். இரு சுயேச்சையர். 10-ஐ. க. பெயரில் சுயேச்சைகள். ஆக சமபலம் கொண்ட நகர மன்றத்தில் 'யார் தலைவராக வருவர்?' என்ற நம்பிக்கையற்ற நிலையில் இருந்தபோது தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் இராஜாராம் அவர்கள் வந்து தலையிட்டு ஜனநாயக காங்கிரஸ்காரர் ஒருவரை வாங்கியதும் அல்லாமல் காங்கிரஸ் உறுப்பினர்கள் உறுதி குலையாமல் இருக்க அவர்களுக்கும் '......' கொடுக்கப்பட்டு தலைவர் தேர்தலில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்ருர்,காங்கிரசை சேர்ந்த பசுவையா என்பவர்.

எனவே நகரமன்றம், அமைச்சர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வரவேற்பளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவர பயந்து நகரமன்றத் தலைவர் தன் சொந்தப் பொறுப்பில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் வரவேற்புக் கொடுத்துக்கொண்டார். (அத்தாட்சியாக இத்துடன் எனக்கு வந்த அழைப்பினையும் அனுப்பியுள்ளேன்)

அந்த வரவேற்பில் நகரமன்ற உறுப்பினர் இருவரைத் தவிர மற்ற எல்லோரும் மற்றும் நகரத்திலுள்ள காங்கிரஸ் புள்ளிகளும்தான் கலந்துகொண்டனர். அதுவும் "தாசபிரகாஷ்" ஓட்டலில் விருந்துக்காகவே அழைக்கப்பட்டனர். அதைவிடுத்து பொதுமக்கள் வரவேற்போ கூட்டமோ இருக்கவில்லை.

நகரமன்ற உறுப்பினர்களைக் கூட அறிமுகம் செய்துவைக்க வெட்கப்பட்டுக்கொண்டு தலைவர் ஒதுங்கிக்கொண்டார். அமைச்சர்கள் முகத்தில் கொஞ்சமும் மகிழ்ச்சியின்றி பேசக்கூட எழுந்திருக்கவில்லை. மன்றத்தலைவர் கிருஷ்ணராவ் அவர்களும் கவர்னர் மேதி அவர்களும்தான் பேசினார்கள். நிற்க தற்சமயம் சட்டசபை வந்ததால் வழக்கம் போல் உதகைவரும் செல்வம் படைத்தோர் வர அஞ்சி அவர்கள் எல்லோரும் கொடைக்கானல், ஏற்காடு இப்படி வேறு பல இடங்களுக்கு சென்றுவிட்டனர். மளிகைகடைக்காரர்களாகிய எங்களுக்கோ எந்தவித வியாபாரமோ அல்லது தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்போ இல்லாமல் போய்விட்டது. வந்துள்ள உறுப்பினர்களோ 'தாசபிரகாஷ்' ஓட்டலில் தங்கி அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ள பஸ்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். தவிர விலைவாசிகள் அவர்கள் வருவதற்கு முன்பு இருந்ததைவிட ஒன்றுக்கு மூன்ருக இருக்கிறது. இதனல் மக்கள் சட்டமன்றம் இங்கு வந்துவிட்டதே என்று மகிழாமல் மனம் நொந்துள்ளனர். ஏன் இங்கு வந்தோம் என்பதைக்கூட மக்களிடம் சொல்வதற்கு அஞ்சி நிற்கிருர்கள் அமைச்சர்கள். உருளைக்கிழங்கிலிருந்து உளுந்துப் பருப்புவரை, கத்தரிக்காயிலிருந்து கடலைப்பருப்புவரை எல்லாம் விலையேற்றம். மக்கள் வாங்கி பயன்படுத்தும் நிலையில் இல்லை. என். ஜி. ஓ.க்கள் நிலையோ பரிதாபம்! பரிதாபம்!! வாங்கிய சம்பளம் விலையேற்றத்தால் போதவில்லை, என்று முனகல் குரல் எழுப்புகின்றனர்.

உதகை மக்களில் பெரும்பாலோர் சட்டமன்றம் உதகைக்கு வந்ததை ஆதனல் கண்டிக்கின்றனர். சட்டமன்றம் நடக்கும் வேடிக்கையைத் தவிர மக்களுக்கு வேறுபயன் ஏதும் இல்லை. மாருக தொல்லைகள்தான் தொடர்ந்துள்ளன.

தவிர நமது தலைவர்கள் வராத காரணத்தால் சட்டமன்ற நடவடிக்கையைப் பார்க்க நகர மக்களிடையே ஆர்வமோ குறைந்துள்ளது.

தி. மு. கழக சுவரொட்டிகள் தலைமைக் கழகம் அனுப்பி இருந்ததை நகரெங்கும் ஒட்டப்பட்டன. ஆனல்...! காங்கிரஸ்காரர்களும், போலீஸ்காரர்களும்கூட்டு சேர்ந்து கிழித்தெறிய ஆரம்பித்தனர். போலீஸ்காரர்கள் 'எங்களை நொந்து பயன் இல்லை; மேலிடத்து உத்தரவு அப்படி' என்கின்றனர். பொதுவாக மக்கள் சட்டமன்றம் உதகை வந்துள்ளதை வெறுக்கின்றனர். காங்கிரஸ்காரர்களும் அமைச்சர்களும் துதிபாடுவோர் சிலர் புகழ்ச்சியைக் கண்டு புன்னகை புரியலாம்— மக்கள் வரவேற்கின்றனர் என்று.

இங்கு கழகத்தின் வளர்ச்சியைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். நகரமன்றத்தில் நமது குரல் ஒலித்துவிட்டது முதல் நாளே! மேலும் மேலும் ஒலிக்கும். அதற்கு நாங்கள் நல்ல முயற்சி எடுப்போம்.

அன்புள்ள,

பு. தொ. வரதராசன்

நகரமன்ற உறுப்பினர்

உதகை.

பட்டம் சூட்டுங்கள்!

7] ஆண்டுச் சந்தா ரூ. 8. (10—5—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 43

கும்பி எரியுது! குடல் கருகுது!

கோலேந்திகளே!

குளுகுளு வாசம் ஒரு கேடா!!

நாடெங்கும், இந்தச் சுவரொட்டிகளைக் கண்டிருப்பர் மக்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஆட்சியாளரின், உல்லாசக்கூத்தைக் கண்டித்து, கூட்டமும் ஊர்வலமும் ஒவ்வொரு இடத்திலும் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஆள்வோர் போக்கு அடாது! தகாது! கூடாது!! —என்று நாடு பேசுகிறது.

ஆனால் நமது நிதியமைச்சர், வெற்றிச் சங்கம் முழங்குகிறார்.

வெற்றி! வெற்றி! ஊட்டியில் சட்டசபை நடத்தியதில் பெருவெற்றி!!—என்று, கடைசிநாளன்று கனத்த குரலெடுத்து, தமிழகம் எனும் பெயர்பூண்ட ஆரன்மூர் மாளிகையிலே முழக்கினாராம்.

உதகையில், சட்டசபைக்கூட்டம் நடத்தியதில் வெற்றியாம்!—உலகுக்கு அறிவிக்கிறது சென்னை அரசு.

எவ்வகையில் வெற்றி?-தமிழகத்தின் உல்லாசத் தோட்டிலாம் உதகையில் போய் உட்கார்ந்து ஆராய்ந்ததின் விளைவாக, நாட்டுக்கு என்ன புதியதொரு சட்டத்தையும், அதன் வாயிலாகப் பெரியதொரு மாறுதலையும் அளித்திருக்கிறார்கள்? வேலைக் களைப்பால் ஓய்வு கிடைக்காதபோது, சிந்தனைச் சிற்பிகள் ஏய்ந்த இடம் நாடிப்போய், உயர்தரமான கருத்துக் கலையும், எழுத்துக்கலையும், பெற்றெடுப்பதாகச் சொல்வதுண்டு. உல்லாச இடம் நாடிச்சென்ற இந்த உத்தமர்கள் நாட்டுக்கு வழங்கிய செயலோவியம் யாது? புதியதொரு பொருளாதாரத் திட்டம் கண்டனரா! சமுக மாறுதலுக்குத் தனிப்பாதை அமைத்தனரா! இத்தனை நாளுமில்லாமல் அங்கேபோய், சட்டசபையைக் கூட்டியதில், நாட்டுக்குத் தரும் புதுமை என்ன!!

சென்னையில் கூடினால் என்ன காரியங்கள் நடக்குமோ, அதுதான் அங்கும் நடந்திருக்கிறது. இம்மியளவும் மாறுதல் இல்லை. இன்னும் சொல்லவேண்டுமானால், வந்த எம்.எல்.ஏ.க்களில் பலர், சட்டசபையை விட்டு அங்குமிங்கும்தான் இருந்தனராம்.

பிறகு எவ்வகையில் இக்கூட்டம் வெற்றி? — அமைச்சர் அறிவிக்கிறார், ஏராளமான மக்கள்வந்து வேடிக்கை பார்த்தார்களாம்! சென்னையில் வந்து வேடிக்கை பார்ப்பதைவிட, ஊட்டியில்வந்த 'விசிடர்'கள் தொகை அதிகமாம்!! அறிவிக்கிறார் அமைச்சர். சென்னையில் சட்டசபை நடைபெறும்போது, உள்ளேபோய்ப் பார்க்க விரும்பும் அனைவரும் பார்த்துவிட முடியாது. எத்தனையோ மேடுபள்ளங்கள்! அதிலும் நாம் சட்டமன்றம் போனபிறகு வரும் மக்கள் தொகை அதிகம் —வருகிறவர்களில், பாதிப்பேரைத் திருப்பித்தான் அனுப்புகிறதேதொழிய, அரசு யாவருக்கும்வசதிசெய்து கொடுத்ததில்லை!! எனவே, இது எப்படி வெற்றியாகும்? அதிகம் பேர் வந்து வேடிக்கை பார்ப்பதுதான் வெற்றிக்கு அளவுகோல் எனின், அதையாவது சொல்லட்டும் வெளிப்படையாக!!

வெற்றி என்று அமைச்சர் குறிப்பிடுவதற்குள்ள இன்னொரு காரணம், ஏராளமான எம். எல். ஏ.க்கள், எத்தடவையுமில்லாது இத்தடவைதான் சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டனராம். **ஏராளமான எம். எல். ஏ.க்கள் வந்தனராம்! எனவே வெற்றி!!** — என்று சொல்லப்படுகிறது. இதனால், என்ன சொல்கிறார்கள் அமைச்சர்கள், ஊட்டி போன்ற உல்லாசமான இடத்தில் சட்டசபையைக் கூட்டினால்தான், தங்களிடமிருக்கும் 150 எம். எல். ஏ.க்கள் சரியாக வருகிறார்கள் என்றா? . ஆம் எனில், அப்படிப்பட்ட சுகவாசிகளாக இருக்கவா, எம்.எல்.ஏ.க்களாக வந்தார்கள் அவர்கள்? ஊட்டியில் நடத்தினால்தான் அதிகம்பேர் வருவார்கள். சென்னை போன்ற வெயிலடிக்கும் இடத்துக்குக் கொஞ்சமாகத்தான் வருவார்கள் என்றால், காங்கிரஸ் கட்சி எம். எல். ஏ.க்களெல்லாம் குளுகுளு வாசமிருந்தால்தான், வருவார்கள் என்று, அமைச்சர் விளக்கம் தர முன்வருகிறாரா!!

மக்கள் அதிகம் வந்தார்கள்! எம். எல். ஏ.க்கள் அதிகம்பேர் வந்தார்கள்!!— ஆகவே, ஊட்டிக்குப் போய் நாங்கள் நடத்திய சட்டசபை, வெற்றியென்று சொன்னால், விலாநோகத்தான் எவரும் சிரிப்பர். சட்டசபை எப்படி நடக்கிறது என்பதைக்காண, மக்களுக்கு ஆர்வம் இருக்கத்தான் செய்யும்; அது தவறில்லை. அப்படியும், உதகையிலே உள்ள மக்கள் எல்லாம் ஓடிப்போய்ப் பார்த்தனரா என்றால், விபரம், அப்படியுமில்லை. இவ்விதம், மக்கள் இருக்கும் இடந்தோறும், நாங்கள் எப்படிச் சட்டசபை நடத்துகிறோம் என்று காட்டும் ஆசையுண்டா அமைச்சர்களுக்கு? உதகை மக்களைப்போல, ஒவ்வொரு பெரு நகரத்தி

லுமிருக்கும் மக்களுக்கெல்லாம், சர்க்கஸ்காரன் டேரா போடுவதுபோல, சட்டசபையைக் கொண்டுபோய் நடத்தும் உத்தேசமாவது உண்டா? இப்படிச் செய்வது தவறு, சரியா என்பது ஒருபுறமிருக்கட்டும். உதகையைப்போல், நாளை திருச்சி, பிறகு தூத்துக்குடி, தஞ்சை இப்படி 'டெண்டு' அடிக்கும் திட்டம் ஏதாவதுண்டா அரசிடம்!! ஆமெனின், எதற்குச் சென்னையில் ஒரு சட்ட மன்றம்? சென்னையில் ஏன் அமைச்சருக்கு வீடு? அதிகாரிகளும் அலுவலகங்களும் ஏனிருக்கவேண்டும் சென்னையில்?

வெற்றிக்குரியதாக அடுத்து அமைச்சர் சொல்லும் காரணம், உதகைவாழ் மக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் உணரும் வாய்ப்பு ஏற்பட்டது, என்பதாகும். இந்தக் காரணத்தையே, வலியுறுத்திச் சொல்கிறார். மக்கள் இவர்களைப் பார்த்து எண்ணவேண்டுமாம், 'ஆகா' எவ்வளவு நல்லவர்கள், நம்மிடமே வந்து நமது குறைகளையெல்லாம் கேட்கிறார்கள்' என்று வலியுறுத்தி வலியுறுத்திச் சொல்கிறார்கள்.

மக்களுடைய குறைகளை, நேரில் கேட்பது என்பது, பாராட்டப்படவேண்டியசெயலே. அரசிலமர்ந்திருப்போர், மக்களை நாடுவதும், அவர்தம் குறை காண்பதும், குற்றம் என்று சொல்லும் குணக்கேடர்கள் அல்ல நாம். பண்டைக் காலத்தில், மன்னர்கள், மாறுவேடம் பூண்டுபோய், என்னென்ன பேசுகிறார்கள் மக்கள், எங்கெங்கே குறைகள் உள்ளன, என்றெல்லாம் காண்பதுண்டாம். அதேபோல, அமைச்சர்களிலிருந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் வரையில், மாறுவேடம் போட்டுக்கொண்டு போய்த்தான், குறைகளைக் காணவேண்டிய யுகம் அல்ல இது.

கலெக்டரும், உதவிக் கலெக்டரும், தாசில்தாரும், ரிவினியூ இன்ஸ்பெக்டரும், கிராமந்தோறும் மணியக்காரர்களுமாக, இடையறாத ஒரு சங்கிலித் தொடர், வெள்ளையன் நிர்வாகத்தில் அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, நாட்டின் குறைகளையும் தேவைகளையும் எடுத்துச் சொல்லும், ஏராளமான சங்கங்களும், அந்தச் சங்கத்தின் தலைவர்களும், இந்த அமைப்புகளைக்கொண்ட அரசியல் கட்சிகளும், அதன் சார்பில் மக்கள் பிரதிநிதிகளாகவரும் எம். எல். ஏ-க்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் ஜனநாயகமுறை, ஏற்பட்டிருக்கின்ற காலமிது. இது மட்டுமின்றி, மக்களுடைய நாடிகளையும், அரசியல் இயக்கங்கள் எழுப்பும் குரலினையும், உண்மைதானா, வெறிக்கூச்சலா, என்பதைக் குறிப்பெடுத்து அனுப்பும் இரகசிய போலீஸ் இலாகா வேறு இருக்கிறது அரசிடம். பொதுக்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரி உட்கார்ந்துகொண்டு குறிப்பெடுக்கும்போது, நமக்குப் பரிதாபமாகவேயிருக்கிறது.

இவ்வளவு வழிகளிருந்தும், இப்படிக் கூண்டோடு போனால்தான், குறைகளைக் கண்டுபிடிக்கமுடியும் என்கின்றாரா, அமைச்சர்? உதகைக்குப் போனதனால்தான், அங்குள்ள மக்களின் குறைகளையும் தேவைகளையும் உணரமுடிந்ததுபோல் பேசுகிறார்களே, அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். **பூதக்கண்ணாடிகொண்டு, மக்களுடைய தேவைகள் என்னென்ன என்று கண்டுபிடிக்க வேண்டிய அளவுக்கு "பூலோக சொர்க்கமாக" இல்லை, நாடு! நாட்டின் தேவைகளும், மக்களுடைய நிலையும் மலைபோல ஒவ்வொருக்கும் தெரியும் நிலைதானிருக்கிறது!!**

இந்நிலையில், இக்கூற்றினை எப்படி ஒப்பமுடியும்? இப்படிப்போய்த்தான் குறைகளை அறிந்து, அரசாங்கம் நடத்தப்போகிறோம் என்றால், அதையாவது தெளிவாகக் கூறிவிட்டுமே!! கூறுவார்களா சென்னை சர்க்கார்? மற்றுமொன்று, என்னவோ, நேரடியாகப் போய் உதகை மக்களின் தேவைகளை உணர்ந்துவிட்டதுபோலப் பேசுகின்றனரே, இதற்குச் சட்டசபை முழுவதையுமா கூட்டிக் கொண்டு போகவேண்டும்! மறந்துவிட்டாரா, காமராஜர், தனது பாகல்மேடு பாதையை!! முதலமைச்சரானதும், அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு, 'கிராமராஜ்யம்' புரியப்போகிறேன் என்று சொல்லி, அதிகாரிகள் புடைசூழப் போய், மக்களிடம் இருந்தெல்லாம் மனுக்களையும் மகஜர்களையும் வாங்கினாரே, என்னவாயிற்று, பாகல்மேடும், தண்டலமும்? அதற்குப்பிறகு, தொடர்ந்தாவது, ஒவ்வொருமாவட்டத்திலும், ஊரிலும் நடக்கமுடிந்ததா முதலமைச்சரால்! ஒவ்வொரு இடத்திலும், முதலமைச்சரிடம் தங்களுடைய முகாரிகளையெல்லாம் ஒன்றாக்கி, மனுக் கொடுத்தார்களே, கிராமத்து மக்கள். என்ன நடவடிக்கையை எடுத்தார், காமராஜர்? ஏதோ, அதுவும் ஒரு கூத்துப்போல ஆயிற்றே ஒழிய, உருப்படியாக என்ன செய்ய முடிந்தது; இவரால்? அப்படிப்பட்ட, இந்த ஆற்றலரசர்கள், சட்டசபையைக் கூட்டிப்போய்ச் சாதித்ததென்ன! குற்றங்குறைகளை நேரிலே கண்டோம், பெருவெற்றி என்று பேசுவதன் பொருள்தான் என்ன!!

வெற்றியாம் வெற்றி!— இப்படிச் சொல்லும்போது, அவர்கள் எவையெவை வெற்றியெனச் சொல்கிறார்களோ, அவையெலாம் வெற்றியல்ல என்பது விளங்கும். பிறகு, ஏன், அவர்கள், இவைகளையெல்லாம் சொல்லி, வெற்றியெனக் காட்டிக்கொள்ள விரும்புகிறார்கள்—எனும்போதுதான், உண்மை துலங்கும்.

நாடு பேசுகிறது!— இவர்களது, கேலிப்போக்கை.

நாம் கண்டிக்கிறோம்!— உல்லாசத்துக்கு ஊரார் பணமா என்று,

இந்தக்கண்டனங்களைப் பார்க்கிறபோது, காசைக் கரியாக்கவில்லை; நாங்களும்போய் உருப்படியான காரியங்களைத்தான் செய்தோம் என்று நிரூபிக்க முயல்கிறார்கள்.

அந்த முயற்சியின்காரணமாக, வெற்றி! வெற்றி!! என்று முழக்கமிடுகிறார்கள்.

உண்மையிலேயே, இவர்கள் வெற்றி எதையாவது, கொண்டுவந்திருப்பார்களாயின், சிரம்குனிந்து, செய்தது தவறுதான் திறமைசாலிகளே, என்று சொல்லி நாம் நமது கண்டனத்துக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளத் தயார்.

வீணாக நமது வாயடைக்க, சித்தாப்புக்காக இப்படியெல்லாம் பேசுகிறார்கள்.

கேலியாக இருக்கிறதே!—என்பீர்கள்.

நாடும் கேலிக்கூத்தைக் கண்டு, மனப்புழுக்கம்தான் அடைந்துள்ளது.

தவறு!—எனும்போது, உணர்கிறவன் உத்தமன்.

உணர்ந்தும்!—செய்கிறவன்; திமிர்பிடித்தவன்.

செய்தது சரியே!—என்று பிறகும் வாதாடுகிறவன் எத்தன்.

வெற்றி பெற்றோம் என விருதுகட்டும், இந்த வீரர்களுக்கு; நீங்கள் இந்தப் பட்டங்களில் எதை வேண்டுமானாலும், சூட்டலாம். அது உங்கள் விருப்பம்!!

தீங்கு வருகுது, தீரத்தைக் காட்டுங்கள்!

பாராளுமன்றக்குழு, ஆட்சிமொழி பற்றிய தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது. 1965-லிருந்து இந்திய உபகண்டத்தின் ஆட்சிமொழியாக இந்தி வரவிருக்கிறது. எல்லோருக்கும் புரியும் ஆங்கிலம் இருக்கும் இடத்தில் குறிப்பிட்ட பகுதியினர்க்கு மட்டுமே புரியக்கூடிய இந்தி அமரப் போகிறது.

மணப்பருவத்துக்கு முற்றிலும் தகுதியில்லாத ஒரு இளம் பெண்ணைப் பிடித்திழுத்து கட்டாயத் திருமணத்தில் ஈடுபடச்செய்வது போன்று, ஆட்சி மொழிக்கு வேண்டிய பருவமும் பக்குவமும் இல்லாத ஒருமொழியைப் பலவந்தப்படுத்தி அரியணைக்கு ஏற்றுகின்றனர். பெண் தக்கபருவத்தினளாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை; ஆனால் ஒரு பெண், மனித இனம் என்று சொல்வதற்கே தகுதியில்லாதவளாயிருந்தால் எப்படியிருக்கும்? அதுபோல இந்திக்குத் தக்க பருவமும் பக்குவமும் இல்லையாயினும் வளமும் செழுமையுமாவது இருக்க வேண்டாமா? போகவேண்டிய ஊருக்கு பல நாட்கள் முன்னதாகவே டிக்கட்வாங்கி வைத்துக்கொள்வதுபோல 1965-லிருந்து ஆட்சிமொழியாக ஆக்கப்பட இருக்கிற இந்திக்கு இப்போதிருந்தே சில அடிப்படை வார்த்தைகளையே புதிதாகத் தோற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு துணைக்கண்டத்துக்கே ஆட்சிமொழியாகப் போகும் இந்திக்கு எத்தனை 'வளம்' பார்த்தீர்களா?

1965-முதல் மத்திய அலுவல்கள் முழுதும் இந்தியில் — அதாவது தற்போது இருப்பதைவிட இன்னும் பன்மடங்கு அதிக அளவில்! இரயில்வே, தபால் தந்தி, இராணுவம், அரசாங்கக் காரியாலயங்கள் இதுபோன்ற இன்னும் பற்பல துறைகள் அனைத்திலும் இந்தி மொழி அமர இருக்கிறது. இனி மத்திய ஆட்சித்துறையில் வேலைவிரும்புவோர் இந்தி தெரிந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

மற்றக்குழுக்களைப்போலல்லாமல், இந்தப் பாராளுமன்ற மொழிக்குழு சிறப்பு அதிகாரங்களைப் பெற்றது.

அன்பு

அறிக்கையை அமுலாக்குவதில் இக்குழுவின் தீர்ப்பே முடிவானது. அதனைக் கூட்டிக் குறைக்கும் அதிகாரம் ஜனாதிபதி ஒருவரிடம்தான் உள்ளது. எனவே பாராளுமன்றத்தில் என்னதான் விவாதித்தும் பயனேதும் பெறப்போவதில்லை என விசனம் தெரிவிக்கிறது ஒரு ஏடு. இதற்கிடையில் இவ்வறிக்கையைப்பற்றிய பேச்சுவார்த்தைகளை இம்முறை நடக்கும் பாராளுமன்றம் மேற்கொள்ளாது என வேறு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

செய்வதையும் செய்துவிட்டு' பின்பு, இந்தியைத் திடுமெனப் புகுத்தமாட்டோம் என்ற பசப்பு வார்த்தைகளை வேறு உதிர்த்திருக்கிறது குழு. சிறுகச் சிறுக, அதாவது ஆங்கிலத்துடனேயே 1965-வரை புகுத்தியபிறகு அதற்குப் பின் இந்தியை மட்டும் தனி ஆட்சி மொழி ஆக்கிவிடுவார்களாம். அதாவது ஒருவனிடம் முதலில் சிறுகச்சிறுக உணவோடு விஷத்தையும் கலந்து கொடுக்கிறேன்! பின் விஷத்தை மட்டும் தனியாகக் கொடுக்கிறேன்! என்பது போன்று இருக்கிறது. விஷத்தை உணவோடு கலந்து கொடுத்தால்தான் என்ன, அல்லது தனியாகப் பிரித்துக்கொடுத்தால்தான் என்ன? விளைவு ஒன்றுகத்தானே இருக்கப்போகிறது? தமிழர்களுக்கு இந்தி ஆங்கிலத்தோடு வந்தாலும் அல்லது தனித்து வந்தாலும் அது முற்றிலும் வேண்டாததுதான்.

குழுவின் சிபாரிசுகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாகச்சில பசப்பு வார்த்தைகள் காணப்படுகின்றன. பிற மொழியினருக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும், மாறுதலின் வேகம் இப்போது அலுவலில் உள்ளவர்

எதிர்ப்போம்!

"இந்தியைக் கட்டாய பாடமாக்குவது, ஒரு கூட்டத்தின் அரசியல் திணிப்பு ஆகும். ஒரு கூட்டத்தாரின் ஆதிக்கத்தை வளர்ப்பதாகும். எனவே, இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்தாக வேண்டும். இந்த விவகாரத்தில், வங்கம் பிறருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்"

என்று, டில்லி அரசின், மொழி அறிக்கை கண்டு குமுறி, இந்தக் கிழமை டாக்டர் சுனீல் குமார் சட்டர்ஜி, அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

களுக்குப் பாதகமாக அமையாது என்றும் கூறியிருக்கிறது. ஆனால் அதேபோது, இந்தியை ஆங்கிலம் இருக்கும் இடத்தில் அமரவைக்கப் போகும் முயற்சிகள், முன்னேற்றமானவைகளாகவும், நல்லபயனளிக்கக் கூடியவைகளாகவும் இருக்கவேண்டும் என்று அறிக்கையின் மற்றோரிடத்தில் காணப்படுகிறது.

"பிறமொழியினருக்குத்தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறியிருப்பதெல்லாம் வெறும் உபசாரவார்த்தைதான்" என்று கோபாவேசத்தோடு கூறியுள்ளது 'தினமணி' ஏடு தனது 24—4—59 தலையங்கத்தில். இந்தியைத்தான் ஆட்சித் துறையில் புகுத்திவிடுகிறார்களே, பின், மற்றமொழிகளுக்கு எதற்காக பாதுகாப்பு? ஆடு நனைகின்றதே என்று ஓநாய் மிகவும் கவலைப்பட்டால், அது உண்மையான கவலையாகுமா?

1965க்குப் பின்னரும் ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடிக்கும் என்று அரசாங்கம் கூறிய வாக்குறுதியைத் திரும்பவும் அவர்களே விழுங்கிக்கொண்டார்களோ என எண்ணும்படியாக உள்ளது—1965க்குப் பின்னர் இந்தி மட்டுமே ஆட்சிமொழியாக அமைக்கப்படும்-அமைக்கப்படவேண்டும் என்று குழு கூறுவதன் நோக்கம்.

குழு அறிக்கையைச் சமர்ப்பித்த அன்று, அக்குழுவின் தவறானதும் மாறானதுமான சிபாரிசுகளைமிகவும் சினந்து சாடியிருக்கிறார் பிராங்க் அந்தோனி என்ற உறுப்பினர். இந்தி ஆட்சிமொழி ஆவதுஆளுங்கட்சியினரே விரும்பும் தேசிய ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் என்று பேசியிருக்கிறார். 1965க்குப் பின் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாவது அரசாங்கம் முன்பு கொடுத்த வாக்குறுதியை மீறுவதாக உள்ளது என்று கூறியிருக்கிறார். எல்லாவற்றுக்கும்மேலாக "இந்தியைவிடப் பழமையானதும் செழிப்புள்ளதுமான மற்ற மொழிகள் பலவுள்ள நாட்டில் தேசியமொழி என்று பேசுவது "தேசிய" என்ற பிரயோகத்துடன் எல்லா உள்ளர்த்தங்களுடனும் நாடு முழுவதிலும் அம்மொழியைத் திணிக்கும் யோசனையைக் குறிக்கும்" என்று அவ்வுறுப்பினர் கூறியிருப்பது மத்தியஆட்சியினரின் மனப்போக்கை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு இந்தியை ஆட்சிமொழியாக்கி மற்ற மொழியினர்க்கு எல்லா வகையிலும் ஊறு கொடுக்கும் அரசின் போக்கையும் குழுவின் சிபாரிசுகளையும் "தினமணி" ஏடு பொங்கியெழுந்து கண்டித்திருக்கிறது. அக்குழுவின் "சிபாரிசில் விவேகம் தென்படவில்லை. பிரத்தியட்ச உணர்வுடன் கமிட்டி செயலாற்றவில்லை. சாத்தியக் கூறுகளை மதிப்பிடாமல் தடலடியாக, தான்தோன்றித்தனமாக கமிட்டி நடந்துகொண்டிருக்கிறது. ஆட்சி மொழிக் கமிஷன் வந்தபிறகு தேசத்தில் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. இந்திமொழி வெறியினர் (அதன்) தகுதியைப் பாராமல் ஆட்சிப்பீடத்தில் அதைத் திணித்தேற்றுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் அசட்டுப் பிடிவாதத்தைத்தான் பிரதிபலிக்கிறது... கமிட்டி செய்துள்ள தடித்தனமான சிபாரிசுகள்..." இவ்வாறு, "விவேகமற்றது, தடலடியானது, தான்தோன்றித்தனமானது, அசட்டுப் பிடிவாதமானது, தடித்தனமான சிபாரிசுகள்" என்பனபோன்ற சுடு சொற்களை நியாய உணர்ச்சியின் மேலீட்டால் கோபம் பொங்க எடுத்து வீசியிருக்கிறது 'தினமணி' ஏடு!

"நேருஜி கௌஹாத்தியில் கொடுத்த வாக்குறுதி எங்கே?" என்று, கைகேயி தசரதனிடம் அவன் அளித்திருந்த வாக்குறுதிகளைப்பற்றிவினவியதைப்போன்று தினமணி நேருவை நோக்கி வினவியிருக்கிறது.

முறையீடு!

ஆச்சாரியார், டாக்டர் சி. பி. இராமசாமியார், மாஸ்டர்தாராசிங், எஸ். ஈ. அரங்கநாதன், டாக்டர் சுனீல் சாட்டர்ஜி, டாக்டர் கார்வே, சுப்பராவ், முல்க்ராஜ் ஆனந்த், அப்துல் வகீத், விவேகானந்த முகர்ஜி முதலிய இந்த உபகண்டத்துப் பெருமக்கள், டில்லிப் பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியாவது:

"இந்தி பேசாத மக்களின் விருப்பம் புறக்கணிக்கப்படுகிறது. இந்தி பிரச்சாரத்திற்காக அஞ்சல் துறையும், வானொலி துறையும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்; இந்தியைத் திணிக்கும் முயற்சி கைவிடப்படவேண்டும்"

ஆங்கிலத்துக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும் எல்லாத் தகுதிகளைப் பற்றியும், இந்திக்கு செயற்கையிலும் உண்டாக்கப்பட முடியாத தகுதியின்மைகளைப்பற்றியும் ஆட்சிமொழி விவகாரங்கள் அறிந்த அனைவரும் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டார்கள். ஆனால் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே மற்ற மொழிப் பகுதியில் இந்தியை மெல்லமெல்ல, ஆனால்உறுதியாகக் கொல்லைப்புறமாகத் திணித்து வந்தனர். ஆனால் இனிக்கொல்லைப்புறமாக வந்த இந்தி நடுக்கூடத்திலேயே அண்டை அயலார் அறிய அமரப்போகிறது.

சமீபத்தில் பண்டித நேரு இங்கு பவனி வந்து சென்றபோது தமிழ் மணக்கும் தென்னகத்தின் தென் கோடியிலுள்ள சிற்றூர் பேரூர்களிலெல்லாம் தமிழுக்கு அருகில் இந்தியில் பெயர்களை எழுதியிருக்கக் கண்டோம். ஆக்கமும் ஊக்கமும் அளித்துத் துணை நின்றவர்கள் நம் தமிழ்ச் சகோதரர்கள் தான். வடநாட்டு நண்பன் ஒருவன் தன் வீட்டுக்கு வருகிறான் என்று எந்த ஒரு தமிழ்நண்பனும் தன் தாய்க்கு வடநாட்டு உடையை அணியவைத்து அறிமுகப்படுத்தி வைத்துப் பெருமைப் பட்டுக்கொள்ள மாட்டான். ஆனால் தமிழ்த்தாய் பெற்ற சில திருக்குமரர்கள் அவர்கள் கருதிக் கொண்டிருக்கிற யாரோ ஒரு வடநாட்டு எஜமானனுக்காக அருந்தமிழ்ப் பெயர்களையெல்லாம் யாருமறியா இந்தியில் எழுதிக் காட்டிப் பெருமையும் பட்டுக்கொண்டனர். அவர்களையெல்லாம் இத்தமிழ்ப் பூமி இன்னும்தான் தாங்கிக் கொண்டுயுள்ளது!

சுரத்தின் வேகம் ஒரு மனிதனை சில மணித்துளிகள் முன்னளவில் தான் பிடிக்கும். ஆனால் காசநோய் நல்ல முற்றிய நிலையில்கூட அது பிடித்திருக்கும் மனிதனுக்கு அதைப்பற்றித்தெரியாதஅளவில் மறைமுகமாகவே இருந்துவந்து அம் மனிதனை உருக்குலைக்கும். காசநோய் அளவில்தான் இந்தி சிறுகச் சிறுகத் தென்னகத்தைப் பிடித்துவந்தது. இனி இன்ன தேதியில்தான் முற்றிய நிலையில் முழுதும் பிடிக்கப் போகிறது என

(10-ம் பக்கம் பார்க்க)

ஒரு கற்பனை உரையாடல்

காரணம் என்ன?

[அண்மையில் நேரு சென்னை விமானக்கூடத்தில் வந்து இறங்கிய சமயம். அவரை வரவேற்கக் காமராஜரும், பக்தவத்சலமும், சுப்பிரமணியமும் இன்னும் பல பிரமுகர்களும் கூடியிருந்து கற்பனையாக இப்படி ஒரு உரையாடலை நிகழ்த்துகின்ற காட்சி.]

நேரு:- (விமானத்திலிருந்து இறங்கியவுடன்) நமஸ்தே! கைகூப்புதல்.

காமராஜர்:- (மாலையைப் போட்டு) நமஸ்தே பண்டிட்ஜி...!

சுப்பிரமணியம்:- ஆசியாவின் ஜோதி... மனிதகுல மாணிக்கம்... சமாதானப் பிரியர் ... வாழ்க வாழ்க... தங்கள் வரவு நல் வரவாகுக...

நேரு:- எனப்பா...என்னைப் புகழுகிறீங்க...! என் புகழ் எல்லாம் இங்கே வந்ததும்தான் எங்கேயோ போய் விடுதே...?

சுப்:- உங்கள் புகழுக்கு என்னங்க குறைச்சல்... எங்கு சென்றாலும்...?

காம:- வரவேற்பும்...... மாலையும் குழந்தைகளும்...

நேரு:- போதும்...... போதும் போன தடவை... வந்தபோதே கருப்புக்கொடி... இப்பொழுது எந்தக்கொடி காட்டப் போறாங்களோ?...!

காம:- கொடியாவது... கொம்பாவது... அப்படி ஒன்றும் இல்லீங்க... கவர்னர் மாளிகைக்குப் போவோம் வாங்க...

[கவர்னர் மாளிகையை அடைதல்...விருந்து சாப்பிடுதல். பின்]

நேரு:- அதுசரி... ஏன் உன் முகமும்... மற்றவர்கள் முகமும் வாட்டமாய் இருக்கு...?

காம:- நல்லாத்தானுங்களே இருக்கிறேன்! (சுப்பிரமணியத்தையும், பக்தவத்சலத்தையும் பார்த்து) ஏம்பா, நான் என்ன வருத்தத்தோடு இருக்கிறேனு என்ன?...

சுப், பக்தவத்சலம்:- அப்படி ஒன்றும் இல்லீங்க... சமீபத்தில் தான் நகரசபைத் தேர்தல் நடைபெற்றது...?

நேரு:- ஆமாம்! கேட்க மறந்து விட்டேனே! அது விஷயமாத் தெரிந்துகொண்டு போவதற்குத் தான் வந்தேன்! தேர்தல் எல்லாம் எப்படி...

அ. ஹபீப்முஹம்மது

காம:- [மௌனம் மற்றவர்களைப் பார்த்தல்]

நேரு:- என்ன காமராசரே... நான் கேட்கிறேன்... நீபாட்டுக்கு கீழே பார்க்கிறே.

காம:- ஒண்ணுமில்லே... நலல விதமாகத்தான் நடந்தது...?

நேரு:- பின்னே ஏன் உங்கள் முகத்திலே சோகம் தாண்டவமாடுது?

காம:- இந்த... தி. மு. க. காரர்கள் இருக்கிறார்கள் அல்லவா...?

நேரு:- அவர்களைப்பற்றி நீ ஏன்ப்பா பேசுறே... நம் கட்சி என்ன? கொள்கை என்ன...? இதையெல்லாம் கவனிக்காமல்?

காம:- அதுக்கு அல்ல பண்டிட்ஜி! சட்டசபைத் தேர்தலிலே போட்டியிட்டதுபோல் நகரசபைத் தேர்தல்களிலேயும் போட்டியிட ஆரம்பித்து விட்டார்கள்.

நேரு:- போட்டியிட்டால் என்ன? அவர்களால் எதைச் சாதிக்க முடியும்...? காங்கிரஸை எவராலும் அசைக்க முடியாது.

காம:- நானும் இது நாள் வரையில் அப்படித்தான் நினைத்துக் கொண்டு இருந்தேன்! அவர்கள் சாதித்துக் காண்பித்துப் பெருமைப்படும்போதுதான் மனசு வேதனையாக இருக்கு.

நேரு:- விஷயத்தைச் சொல்லாமல் என்னப்பா... வளர்த்திக் கொண்டே போகிறாய்? தேர்தல் முடிவு எப்படி...?!

காம:- நம்ம கட்சி இருக்கே...... காங்கிரஸ்?... அதுக்கு 37. இந்த தி. மு. க.வுக்கு......

நேரு:- அவர்களைப்பற்றி ஏனப்பா சும்மா பேசுறே...

காம:- பேச வேண்டிய சந்தர்ப்பத்தை உண்டு பண்ணிவிட்டாங்களே...

நேரு:- அப்படி என்னப்பா சந்தர்ப்பம்...

காம:- **அவர்களுக்கு சென்னை நகரசபைத் தேர்தலில் 45 இடங்களில் வெற்றி...**

நேரு:- என்ன!... 45 இடமா:.....(திகைத்தல்) ஆச்சரியமாயிருக்கே......

காம:- நமக்குமட்டுமா ஆச்சரியம்?... தி. மு. க.வே பெரிய ஆச்சரியப் படுதுங்களே!

நேரு:- சரிதான்! இப்பத்தான் புரியுது... உங்கள் முகத்திலே விளக்கெண்ணெய் வடிகிறதற்குக் காரணம்?... கேவலம் நகரசபைத் தேர்தலிலே வெற்றி பெற முடியவில்லையென்றால் வேறு எதிலேதான் வெற்றி பெறப் போகிறீர்கள்?

பக்தவத்சலம்:- (மனதுக்குள்) ஆமா மாம்!... அங்கங்கேயும் அப்படித்தான் இருக்கு...பம்பாய் குஜராத் மராட்டியம், வங்காளம் முதலான இடங்களிலேஎல்லாம் காங்கிரஸ் காணுமல் போய்விட்டது... இந்த நகரசபைத் தேர்தலிலே தோற்றதற்கு என்னமோ பெரிசா உடம்பை போட்டு அலட்டிக்கிருரு... விட்டுத் தள்ளுறதை விட்டுட்டு...

காம:- நாங்களும் எவ்வளவோ தியாகிகளைப் பற்றியும், காங்கிரஸை வளர்த்த காந்தியைப் பற்றியும், காங்கிரஸ் கொள்கையைப்பற்றியும் விளாசித் தள்ளிப்புட்டோம்...

நேரு:- பின்னே எப்படி காங்கிரஸ் தோற்றது!... உங்களையெல்லாம் எதுக்கு வச்சிருக்கு?

காம:- சந்து பொந்து...... பட்டி தொட்டி எல்லாம் பிரச்சாரம் செய்தேனுங்க...

நேரு:- என்ன... பேச்சிலே தி.மு.க' வாடை வீசுது...

காம:- அப்படி ஒன்றும் இல்லீங்க. நல்ல பிரச்சாரம்...கூட்டம் உங்களுக்கு! வோட்டு எங்களுக்கு... என்று பிரச்சாரம் செய்தேன்... தொண்டைகூடக் கம்மிப்போய் விட்டது...

சுப்:- கடைசியிலே எங்களுக்கே வேட்டு வைக்க ஆரம்பிச்சுட்டாங்க...... ஒரு மாதமா நல்ல சப்பாடு... தூக்கம் ஏதுங்க... தி. மு. க. போட்டியிட்ட இடம். 90. வெற்றி பெற்ற இடம் 45. ஏகஇந்திய வாதிகளாகிய நாமோ போட்டியிட்ட இடம் 100... பெற்ற இடமோ... 37... இந்த 37 இடமும் எப்படி நமக்குக் கிடைத்தது என்றே சிலர் ஆச்சரியப்படுகிறார்கள்!...அதை நினைக்கும்போதுதான்...!

நேரு:- வெட்கம்!... வெட்கம்!...... வரவரக் காங்கிரஸின் புகழ் மங்குகிறது!... மக்களிடையே காங்கிரஸின் செல்வாக்கு ஏன் குறைந்தது...?

காம:- மக்களிடையே தி. மு. க. போதை நிறைய ஏறியிருக்குங்க. நாம் சொல்லும் கருத்துக்கள், காரணங்கள் எல்லாம் கண்கட்டு வித்தையாம்! நம்ம கருத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள்?...!

நேரு:- அவர்களுக்குப் போதை ஏறியிருக்கா?...... இல்லை உங்களுக்கு நம்மை யாராலும் அசைக்க முடியாது என்று போதை ஏறியிருக்கா?...

காம:- என்ன! பண்டிட்ஜி...இப்படி சொல்லிட்டீங்க...

நேரு:- இதுவரையிலும் தோல்வியைக் காணாத காங்கிரஸ், இப்படி எல்லா இடத்திலேயும் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்!... சமீபத்தில் மக்கள் வெறுக்கும்படி ஏதாவது காரியம் செய்தீர்களா?...

காம:- இப்ப ஒன்றும் இல்லை பண்டிட்ஜி... சில மாதங்களுக்கு முன்தான் துறைமுகத் தொழிலாளர் போராட்டத்திலே எட்டு பேரைக் கொன்றோம்... முதுகுளத்தூரிலே...!!

சுப்:- (தலையில் அடித்துக்கொண்டு மெதுவாக) அட பைத்தியமே! இதைப்போய்ச் சொல்லுதே? எவ்வளவு சொன்னாலும் தெரியமாட்டேங்கிறது...

நேரு:- என்ன அங்கே முணகல்...

சுப்:- ஒன்றும், இல்லை பண்டிட்ஜி...சமீபத்தில் அழுகும் பொருள்களுக்கு விற்பனை வரி போட முடிவு செய்துள்ளோம்! ஊட்டியில் சட்டசபையை நடத்துவது என்று முடிவு செய்துள்ளோம்! இதற்கெல்லாம் தி. மு. க. ஆதரவு தரவில்லை. ஊட்டிக்கு வரப்போவதும் இல்லை.

நேரு:- நான்தான் செலவைச் சிக்கனப்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறேனே...நீங்கள் ஏன் ஊட்டிக்குப்போகவேண்டும்...?

கரம:- (தலையை சொரிந்து கொண்டே) ஊட்டியிலே சட்டசபையை நடத்தலாமா என்று யோசனை கேட்டேன்...கேட்டதுதான் தாமதம்...உடனே பார்க்கணுமே, நம்ம ஆளுங்க வாயிலே எல்லாம் தண்ணீர் ஊற ஆரம்பித்துவிட்டது. கையெல்லாம் மேலே பார்க்குது......அப்புறம் சாதாரணமாகச் சொன்னதைப் பயன்படுத்திக்கொண்டு ஊட்டிக்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்று கூறிவிட்டார்கள்! மெஜாரிட்டி நம்ம பக்கங்களா! தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டோம்......ஆனால்...தி. மு. க.... வரச் சம்மதம் கொடுக்கவில்லை.

நேரு:- ஏன் வரவில்லை! என்ன காரணம்...?

காம:- வரிப்பணம் இப்படியா பாழாப்போகணும்...ஊட்டி ஒரு கேடா.......காங்கிரஸ் காரர்களுக்கெல்லாம் சென்னை வெயிலைத் தாங்க முடியவில்லையா? ஏழைகள் கண்ணீரால் சிந்திய பணத்தை இப்படிக் கரியாக்கலாமா? என்று பேசிப்பேசி மக்களின் மனதையே மாத்திப்புட்டாங்க......

நேரு:- சென்னையிலே இருந்தே ஒன்றும் செய்ய முடியவில்லை. ஊட்டியிலே போய் என்னத்தைக் கிழிக்கப்போறீங்க...ஜாலி பண்ணவா பார்க்கிறீங்க? இந்தச் சந்தர்ப்பத்தைவிட்டா வேறு எப்பொழுது ஊட்டியைப் பார்ப்பது என்றஎண்ணம்போலும்...!

பேசாதே!

காய்கறிக்கும் வரியா! இறைச்சிக்கும் மீனுக்கும் வரியா!!-என்று கதறிற்று நாடு.

அமைச்சர்கள் காதுகளில், எட்டும்; ஏதாவதொரு, சமரசம் உண்டாகும் என எண்ணினோம்.

இன்னும் ஓராண்டுக்கு, நாங்கள், இதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளோம்!—என்று 'கனம்' வெங்கட்டராமன் அறிவித்திருக்கிறார்.

பிறகு, வேண்டுமானால், கவனிப்பாராம்! ஓராண்டுக்கு இதே நிலை தானும்!!

மக்கள் கிளர்ச்சிக்கு, தலைவணங்கி, அவர்களது குறைகளை, உடனுக்குடன் கண்டறிவதும், போக்க முயற்சிப்பதும் தான் நல்லாட்சியின் இலட்சணமாகும்.

கலியாணத்துக்கு உதவி கேட்டானும் ஏழை! உன் கருமாதிக்குவா என்றானும் ஒரு சீமான்!! அதைப்போல, இப்போது இதைப்பற்றிப் பேசாதே, காதில் போட்டுக் கொள்ளமாட்டோம் என்கிறார் கனம்,

'ஊட்டி'யிலிருந்துகொண்டுதான் சொன்னார்! மக்களின் வரிப்பணமன்றோ, நம்மை ஊட்டி வாசம் பெறச்செய்கிறது என்பதனை மறந்துவிட்டு, இதனைச் சொல்லியிருக்கிறார்!!

என்னே, விபரீதம்!

என்னே, அலட்சியம்!!

காம:- [மனதிற்குள்] இவருமாத்திரம் குளு குளு பள்ளத்தாக்கிற்குப் போகலாமாம். நாம்மட்டும் ஊட்டிக்குப் போகக்கூடாதாம், வேடிக்கைதான்...

நேரு:- அது சரி......ஊட்டிக்குப் போக எவ்வளவு செலவு...

காம:- சுப்பிரமணியம்! எவ்வளவப்பா...மொத்தம்...

நேரு:- என் உனக்குத் தெரியாதா? ...தலையைச் சொரிந்துகொண்டே ஏன் நிற்கிறே.

சுப்பி:- எறத்தாழ ரூ. 10-இலட்சம் வரை ஆகிவிடுங்க.

நேரு:- அதனால்தான் சொல்றாங்க, 10-இட்சமும் நல்லவழியில் பயன்படுத்தினால் நன்றாக இருக்குமே என்று...!

காம:- என்ன பண்டிட்ஜி......நீங்களே இப்படிப் பேசுறீங்க...?

நேரு:- வேறு என்ன பண்றது... எனக்குச்செல்வாக்குள்ள இடமே ததிங்கிணத்தோம்போடும்போது உங்கள் இடத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்...

காம:- இன்னொருதரம் அப்படி சொல்லுங்க பண்டிட்ஜி...

[சுற்றுப்பிரயாணம் முடிந்து நான்காவது நாள்]

நேரு:- சென்னையில்தான் இப்படி ...மற்ற ஜில்லாக்களில் எல்லாம் எப்படி...

காம:- அதுதான் நீங்களே பார்த்திருப்பீங்களே......மாலையும்... தோரணமும்...

நேரு:- ஓய்......காமராசரே...நான் எதைக் கேட்டேன்...? தேர்தல் முடிவெல்லாம்...?

காம:- அங்கெல்லாம் முன்னே பின்னே தான் இருக்கு. தி. மு. க. 100-இடங்களுக்குமேல் வெற்றி பெற்றிருக்கிறார்கள்......மனதை மாற்றிவிட்டார்கள்...?

நேரு:- ஏன் நீங்களும் மனதை மாற்றுவதுதானே! கவர்ச்சியாகப் பேசுறதுதானே! சட்டசபையிலே என்ன தூங்குகிறீங்களா?

காம:- சட்டசபையிலே எதுக்கெடுத்தாலும் நம்ம சுப்பிரமணியம்தான் பேசறது...... ஆனால் அண்ணாதுரை — அவருதான் தி. மு. க. தலைவர்—நம்மபேச்சுக்கெல்லாம் சுடச்சுடப் பதில் கொடுக்கிறாரு... அவரைக் கண்டால் எங்களுக்கெல்லாம் கொஞ்சம் நடுக்கம்தான்...அவருதான் அப்படின்னா?... யாரோ செழியனும்.

சுப்:- அவர்தானுங்க...... நாவலர் நெடுஞ்செழியன்...?...!

காம:- ஆமாம்! நெடுஞ்செழியன்! அவர் வேறே வெளியிலே நாள் ஒன்றுக்கு மூன்று நான்கு கூட்டங்களிலே பேசிக் காங்கிரஸை ஆதரிக்காதீங்க... தி. மு. க.வை ஆதரியுங்க!...வடக்குவாழுது... தெற்குத் தேயுது... வரிப்பணம் போவுது... திராவிட நாடு பிரியப் போவுது... அப்படியிப்படின்னு பேசுறாரு... மக்கள் அவர்கள் நடத்தும் கூட்டங்களுக்குப்போய் மனதைப் பறிகொடுத்துவிட்டு வந்துவிடுகிறார்கள்!

நேரு:- ஏன் நீங்களும் கூட்டம் போட்டுக் காங்கிரஸின் சாதனைகளைக் கூறுவதுதானே!

பக்த:- (மெதுவாக)காங்கிரஸ் ஏதாவது சாதித்திருந்தால்அல்லவா எடுத்துக் கூறுவதற்கு... காந்தி என்றைக்கு செத்தாரோ அன்றைக்கே காங்கிரஸ் போயிடுச்சி... ஏதோ பேருக்குச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

நேரு:- யார் அங்கே முணுகுகிறது.

பக்த:- இல்லை பண்டிட்ஜி...! நாங்கள் கூட்டம் போட்டால், நாங்களும், போலீஸ்-ம்தான் இருக்க வேண்டியிருக்கு... (மனதிற்குள்) கூட்டத்தில் கல் விழாமல் இருந்தால் போதாதா...

நேரு:- அப்படி இப்படின்னு... தி. மு. க. காரியத்திலே கண்ணுயிருந்துட்டாங்க... அவர்களுக்கும் செல்வாக்கு இருக்கு என்று சொல்லு... அவர்கள் கொள்கை தான் என்ன?

காம:- திராவிட நாடு தனியாகப் பிரியவேண்டுமாம்?... இங்கு வசூலாகும் எல்லாவித வரிப் பணமும்இங்கேயேசெலவழிக்கப் படவேண்டுமாம். இதுதான் முக்கியம்.

நேரு:- அதுதானே நடக்காது! (காமராஜர் காதருகே) நான் ஏன் தெரியுமா இந்தத் திராவிட நாட்டுப் பிரிவினையை ஒத்துக் கொள்ளவில்லை... தென்னகம் தனியாகப் பிரிந்தால் வடநாடு சுடுகாடாக மாறிவிடும்... அப்புறம் எனக்கும், உனக்கும் வேலையிருக்காது! அதனால்தான் தந்திரமா ஏக இந்தியாவைப் பிரிக்கக்கூடாது என்று சொல்லி வருகின்றேன்!...பிரித்தால் நம்ம பாடு ஆபத்து... முண்டியடித்து வரட்டும்... அதற்குமேல் பார்த்துக் கொள்ளலாம். நம்ம அரசியல் தந்திரம் இதுதான்... ஆமாம் உனக்கு எத்தனைதரம் சொன்னாலும் தெரியமாட்டேங்கிறது...

காம:- மேலும் சென்னை மந்திரி சபையைப் பற்றியும் என்னைப் பற்றியும் ஒருமாதிரியாக தி.மு.க. பேசி வருவது என் காதிலே இலேசாக விழுகிறது...

நேரு:- என்ன அப்படி...!

காம:-3 இலட்சம்,4 இலட்சம்மக்கள் தொகை கொண்ட தலைவர்கள் எல்லாம் நம் நாட்டிற்கு வரும் போது 21 குண்டுகள் போட்டு அமோக வரவேற்பு நடக்கிறது! நான் டில்லிக்கு வரும்போது வரவேற்புக்கிடைக்கவில்லையாம். நெக்குருமாவும், டிட்டோவும், பண்டார நாயகாவும், லாமாவும் வரும்போது வரவேற்பு நடக்கிறது... 9 கோடி மக்களுக்குத் தலைவன் வந்தால் வரவேற்பில்லை... மேலிடம் மதிப்பதில்லை. அப்படி இப்படி என்று பேசி வருகிறார்கள்!... எனக்கும் ஆசையிருக்காதா என்ன?

நேரு:- இதற்காகவா நீ வருத்தப்படுறே! டில்லிக்கு வா... 50 குண்டுபோட்டு உனக்கு மரியாதை செய்கிறேன்... எனக்குப் பின்னால் நீதான் எல்லாம்.

காம:- ஹி...ஹி.....,

சுப்:- [மனதில்] சந்தோஷத்தைப் பாரு... நேருவிற்கு நான் இருப்பது தெரியவில்லை...ம்.

நேரு:- ஆனால் உன் திறமை பயன்படவில்லையே... காங்கிரஸ் கோட்டை இப்படியே சரிந்து கொண்டேபோனால் எதிர்காலம் என்ன ஆகிறது...... அதுசரி, பணம் கொடுத்துத்தானே வோட்டுகள் வாங்கினே.

"திராவிடன்"
(என். வி. என்.)
தொலை பேசி
எண்: 62679

காம:- ஆமாம்...

நேரு:- அப்படியிருந்துமா சென்னையிலே 37 இடம்... ஒரு வேளை தி. மு. க. பணம் கொடுத்து வோட்டுகள் வாங்கியிருக்குமோ?

காம:- நீங்க ஒன்னு பண்டிட்ஜி, அவர்கள்கிட்டேபணம் ஏதுங்க? அவர்கள் பேசும்போதே **"எங்களிடம் பணம் இல்லை. குணம் உண்டு"** என்கிறார்களே... பணத்தைக் கண்டு ஏமாறுகிறவர்கள் எல்லாம் மறைந்து விட்டார்கள். கொள்கைகளைத்தான் கவனிக்கிறார்கள்!. நான்கூட ஒருசமயம் தி. மு. க. வைப் பார்த்து பிச்சைக்காரர்கள் என்று கூறி விட்டேன்.

நேரு:- நீ எதைச் சொன்னால் என்ன? நாளைக்கு தி. மு. க. மேயர் ஒருவர் இருப்பார். நான் தமிழகம் வரும்போது நகரசபை வரவேற்புக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டு போவீர்கள். உடனே மண்டையில் அடிப்பதுபோல் அடித்து உட்காரவைப்பார்கள். அப்புறம் நீங்களும், நானும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான்!

காம:- ஏன் மண்டையில் அடிப்பார்கள்?

சுப்:- சட்டசபையிலே நாம் அப்படித்தானே எதிர்க்கட்சிகளுக்குச் செய்து வருகிறோம்!.

நேரு:- இனிமேல்தான் உங்கள் வண்டவாளம் புரியப் போவுது. நான் என்னமோ பெரிசா நினைச்சேன்! தலைநகரிலேயே! அதுவும் அரசியல் அறிவுள்ள இடத்திலேயே இந்தமாதிரி தோல்வி என்றால் மற்ற இடங்களில் கேட்கவா வேண்டும்?... ஏன் வந்தோம் என்று தோன்றுகிறது? பெரிய தலைவேதனையாகப் போயிடுச்சி...

காம:- இனிமேல் சுறுசுறுப்பாக வேலை செய்றேனுங்க.

நேரு:- ஊட்டிக்குப் போகவா சுறுசுறுப்பா வேலை செய்யப் போகிறீங்க...?!

காம:- அடுத்த தடவை வரும்போது...!

நேரு:- தி. மு. க. பலம் அதிகரித்திருக்கும்!... அப்படித்தானே.

காம:- தி. மு. க. பலம் அதிகமாக இருந்தால் நான் உடனே ராஜினாமா செய்துடறேன்.

நேரு:- சரி... சரி... நடந்தது நடந்துவிட்டது... இனிமேலாவது ஜாக்கிரதையாக இருங்கள்!

காம:- அடுத்த தடவை வந்தால் அண்ணாதுரையைப் பார்த்து தாங்கள் பேசினால் நல்லாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

நேரு:- பிறகு யோசனை செய்து பார்த்து முடிவு கூறுகிறேன். காங்கிரஸ்மேல் கவனம் இருக்கட்டும்... வருகிறேன். (விமானத்தில் ஏறிச் செல்கிறார்).

காம:- ஆளைப்போட்டுக் குடைகிறாரப்பா? அவுங்க ஆட்சிக்கு நம்ம ஆட்சி கெட்டுப் போயிட்டுதா என்ன?. (சுக்கன் வருகிறார்) எங்கேயப்பா போய் இருந்தாய்.

சுக்கன்:- நேரு போனதுக்கப்புறம் வரலாம் என்று இருந்தேன், பயமாயிருக்கே...

காம:- நேரு ரொம்பக் கோபத்தோடு போறாரு. நமக்கு நல்ல தாக்கு...

சுப்:- எத்தனையோ தாக்குதல்களைக் கண்டு எக்காளமிடுபவர் நாம்! நேரு தாக்கு எம்மாத்திரம்! வாங்க போவோம்... ஆட்சி நம் கையிலே இருக்கிற வரை ஒரு கை பார்த்துவிடுவோம்!

(போகிறார்கள்.)

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

முன்னறிவிப்புச் செய்துவிட்டு நுழையப் பார்க்கிறது,

வெட்டப்போகும் கத்தியை வெட்டுண்டு படப்போகும் ஆடு தானே முன்வந்து கத்தியின் கூர்மையைப் பரிசோதிக்கிறது! இந்தி தெரிந்தோ தெரியாமலோ தமிழ் மணக்கும் இம்மண்ணில் திணிக்கப் படுவதால், வந்த சுவடு மறைவதற்குள் அது இங்கிருந்து மறையப் போகிறது, இது உறுதி!

தென்னகத்தின் பொறுமையினை மேலும் மேலும் சோதித்த வண்ணமிருக்கின்றனர் வடவர்! அதற்கோர் முற்றுப்புள்ளிவைக்க வேண்டிய காலம் அண்மையில் வந்துகொண்டிருக்கிறது. சிங்கம் உறக்கம் கலையும் வரையில்தானே சுண்டெலியின் விளையாட்டெல்லாம்?

இலைகளெல்லாம் உதிர்க்கப்பட்டபின் செடி உயிர் வாழ்வதே அரிது; தமிழின் ஆட்சி மறைந்த பின் மொழிவாழுமா என்பதே சந்தேகம்தான். நம் சொந்த நாடு வடவருக்கு அடிமைக் காடாய் அமையும்வரையில்தானே இந்தி மொழி ஆதிக்கம்? நம் நாடு நமதாகிவிட்டால்! இவ்வினை மட்டும் தென்னகத்தோரின் உள்ளங்களிலெல்லாம் தோன்றிவிட்டால்...! நமது இலட்சியப் பயணத்தின் பயனை அடைந்ததுபோலத்தான்! எனவே விழி திறக்கும் மொழிப் போரே நாட்டின் விடுதலைப் போராகவும் அமையட்டும்! தீரர் கூட்டம் திறமையினை வெளிக்காட்டத் திரண்டெழட்டும்!

தீங்கு வருகுது தென்னகத்தோரை நோக்கி! அன்னை மொழிக்கு ஊறுவருகுது இந்தியின்மூலம்! பிறவி எடுத்ததன் பயனை நிறைவேற்ற வேண்டாமா? அதை மொழிக்குச் செலுத்துவதைவிடச் சாலச்சிறந்தது வேறென்ன இருக்கமுடியும்? அன்னை மொழி காக்க அன்னையர் பெற்ற பிள்ளைகளெல்லோம் தயாராகுங்கள்! தீங்குவந்துவிட்டது, திறமையைக் காட்டத் தயாராகுங்கள்! பகைவந்துவிட்டது, வாகை சூடத் தயாராகுங்கள்!

முதலமைச்சர் குமுறல்

"ஆங்கிலத்தை அறவே இங்கிருந்து ஒழித்துவிடவேண்டுமென முடிவு செய்தால், நான்தான் அதனை எதிர்த்து அகிம்சா முறையில் 'சத்தியாக்கிரகம்' செய்யும் முதல் மனிதனாக இருப்பேன்", என பீகார் முதலமைச்சர் டாக்டர் கிருஷ்ண சின்கா வெளியிட்டிருக்கிறார்.

மானம்?

மாரி—அறவாழி

__சென்ற இதழ் தொடர்ச்சி...__

ஆம்! அவள் கூறுவதிலும் பொருள் இருக்கத்தான் செய்கிறது. இந்த உலகில் குற்றங்களும் கொலைகளும் ஒழுக்கக் கேடுகளும் நிகழ்வதற்கு என்னதான் காரணம்?... வேறு ஒன்றுமே இல்லை, வயிற்றுக்கொடுமை ஒன்றைத் தவிர!... அப்படியிருக்கும்போது அவர்கள்மேல் குறைகூறி யாது பயன்? சீர்திருத்தவாதிகள் என்று கூறிக்கொள்வோர்தம் கடமை என்ன?... ஒழுக்கக் கேடுகள் எந்த உருவத்தில் இருந்தாலும், அவை மனித சமுதாயத்தின் ஒழுக்கத்தை அரித்துத் தின்னும் நச்சுப் பூச்சிகள்தான்! அதற்காக அதைக் குறை கூறிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா?...... கெட்ட நீரை இறைத்து வெளியேற்றவேண்டும்; இல்லையேல் அதன் ஊற்றையே தூர்த்துவிடவேண்டும்!... சூழ்நிலையின் வற்புறுத்தலால் வழிதவறிப் போன இளம் பெண்களைக் கரையேற்றித் தூய வாழ்க்கைக்கு இழுத்துவர முடியாதா இந்தச் சீர்திருத்தவாதிகளால்?... அதற்கு முன்வரத் தயங்கும் சீர்திருத்தவாதிகள் இருந்துதான் யாது பயன்?... இறந்தொழிந்து மண்ணாகிப் போவதைப்பற்றி எவரும் கண்ணீர் வடிக்கப்போவதில்லை!...

இராணுவத்தில் ஒரு நல்லமுறை உண்டு! அதாவது ஆபத்துக்காலங்களில் எங்காவது ஒரு 'முகாம்' அருகில் எதிரிகளின் குண்டு விழுந்து வெடிப்பதாக இருந்தால், முகாமிலுள்ள உண்மை வீரன் ஒருவன், எண்ணற்கரிய பிற உயிர்களைக் காப்பாற்றுவதற்காகத் தானே ஓடிச்சென்று 'குண்டை'க் கட்டியணைத்து உயிரை விட்டுவிடுவானாம். அதேபோன்று இந்த ஊழல் நிறைந்த சமுதாயத்திலும் செய்ய ஓரிருவராவது ஏன் முன்வரக் கூடாது?

முத்துக்குமரனின் நெஞ்சம் சிந்தித்துச் சிந்தித்துப் புண்ணாகியது. நீண்ட நேரத்திற்குப்பின் ஒரு முடிவிற்கு வந்தான். ஆம்!... அந்த வழிதவறிய பெண்ணை ஏற்றுக்கொள்ள அவன் முடிவுசெய்துவிட்டான்!

அதை அறிந்த அவன் பெற்றோர் அலறித் துடித்தனர். கண்ணீர் விட்டனர். ஊரார் பஞ்சாயத்துக் கூடி அவனை அழைத்தனர். சென்றான். நாட்டாண்வமக்காரர் சற்றுக் கடுமையான குரலிலே பேசினர்.

"...என் தம்பி! உனக்கே இது நன்றாக இருக்கிறதா? கேவலம் ஒரு விலைமகளை மணந்துகொள்ள வேண்டும் என்ற கோணல் அறிவு எப்படி உன்னிடம் முளைத்தது? உன்னைப்பற்றி நாங்கள் பெருமையாகநினைத்துக்கொண்டிருந்ததற்கு இதுவாபலன்? நன்றாகச்சிந்தித்துப் பார்! நீ செய்யப்போவதாகச் சொல்லும் தவறால் நீ மட்டும் பாதிக்கப்படுவதில்லை; உன் பெற்றோர் சாதி சமுதாயம் அத்துணையும் பாதிக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்ல, இந்த ஊரின் மானமே பறிபோகப் போகிறது. இதை எல்லாம் எப்படி எங்களால் அனுமதிக்க முடியும்? தனி மனிதனின் சொந்த வாழ்க்கையில் தலையிட எங்களுக்கு உரிமையில்லைத்தான் என்றாலும், அதனால் ஊரின் மானம் பாதிக்கப்படுமேயானால், அதைப்பார்த்துக்கொண்டு வாளா இருக்கவும் முடியாது. தடுக்கவே செய்வோம்..."

முத்துக்குமரனுக்குத் தாங்க முடியவில்லை; தன்னை மறந்தான். "...ஏனய்யா பெரிய மனிதர்களே! மானம் மானம் என்று என்னவோ ஓலமிடுகின்றீர்களே, அந்த மானம் என்பது உங்களுக்கிருந்திருந்தால், இத்துணை நாட்களாகவும், ஒரு மானமற்றவளை ஊரிலே நடமாட விட்டுவைத்திருப்பீர்களா?... உழைப்பைக்கொண்டு வயிறு வளர்க்க எங்கிருந்தோ வந்த ஒரு அனாதைப் பெண்ணை, உடலைக்கொண்டு வயிறு வளர்க்குமாறு வற்புறுத்தியிருப்பீர்களா? பிறரைப் போலத் தன்னாலும் உழைக்க முடியும், உழைத்துப் பிழைக்க முடியும், ஏதாவது வேலை மட்டும் தாருங்கள் என்று உங்களிடமெல்லாம் வந்து கெஞ்சினாளாமே, அப்போது நீங்கள் அவளைக் கொஞ்ச வருமாறு அழைத்தீர்களாமே, பஞ்சணைக்குப் பாவையாகிவிடு என்று வற்புறுத்தினீர்களாமே! அப்போது எங்கேபோயிருந்தது உங்கள் மானம்?...... வெட்கமில்லை இப்போது அதைப்பற்றிப் பேச...? ...இன்று அவள் ஊரின் நடுவில் அழுகிக்கிடக்கிறாள் நாற்றம் வீசிக்கொண்டு! நல்ல குடும்பங்களின் இன்பங்களையெல்லாம் தட்டிப் பறித்துக்கொண்டோடும் கொள்ளை நோயாக உருப்பெற்றிருக்கிறாள்...! அத்தகையவளை அப்புறப்படுத்தி, நாற்றத்தை, ஒழுக்கக்கேட்டை விலக்க முன்வருகிறபோது மட்டும் என்னை எதிர்க்கிறீர்கள்! தடுக்கிறீர்கள்! இதில் நீதி எங்கே இருக்கிறது? அறிவுடைமை எங்கேஇருக்கிறது?... நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள் அவளை மணந்துகொள்வதனால் என் ஒருவனின் வாழ்க்கைதான் கெடுகிறது. கவலையில்லை, அதன்மூலம் ஒரு விலைமகளை ஒழித்து அவளுக்கும், உங்கள் எல்லோருக்கும் புனர்வாழ்வை அளிக்கப்போகிறேன் என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன்... இந்த ஊரின் மானத்தைக் காப்-

பாற்றப் போவதில் செருக்கடைடுறேன்... தடுக்காதீர்கள்......

இடையே ஒருவன் கத்தினன்.

"...என்ன கூறினலும் இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. பஞ்சாயத்தின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக நடைபெறும் செயல்கள் எதுவானலும், அது இந்த ஊரின் எல்லைக்குள் நடைபெறுவதைப் பொறுக்கமாட்டோம்..."

முத்துக்குமரனின் ஆத்திரம் எல்லை கடந்தது. கூச்சலை அடக்கிக்கொண்டு பேசினன்.

"கவலையில்லை! மனிதப் பண்பாட்டிற்கு அப்பாற்பட்ட இழி செயல்கள் நடைபெறுவதையெல்லாம் அனுமதித்துவிட்டு அதைவிலக்கப்பாடுபடும் நல்ல தொண்டுகளை மட்டுமே எதிர்த்து நிற்கும், இந்த அறிவற்ற சமுதாயத்தைப்பற்றி எனக்குச் சற்றும்கவலையில்லை--தேவையுமில்லை. அதனுள் ஒருவனக வாழ நான் விரும்பவுமில்லை..."

கூட்டத்தினர் அவன் முழக்கம் கேட்டு அடங்கினர். அவன் கிடுகிடுவென்று கீழே இறங்கினன். போய்விட்டான். எல்லோரும் முணுமுணுத்தனர்.

அன்றுமாலை, இருளும் ஒளியும் ஒன்றுகூடும் நேரத்தல் அவளும் அவனும் சந்தித்தனர். வாடிய முகத்துடன் நடந்துவந்த அவனைக் கண்டு அவள் ஓடிவந்தாள். ஓடிவந்து தழுவிக்கொண்டாள், அவளது கண்களிலிருந்து கண்ணீர் மாலைமாலையாகக் கொட்டியது. விம்மினள். அவன் ஆதரவுடன் அவளைக் கேட்டான்.

"ஏன் அழுகிருய்? உன்னைக் கைவிட்டுவிடுவேன் என்று அஞ்சுகிருயா...?"

அவள் நாத்தழுதழுத்தது. குரல் கம்மியது. ஒலியில் சோகம் கப்பிக்கொண்டிருந்தது. பதிலளித்தாள்.

"...இல்லை! தங்களின் தியாக உள்ளம் எனக்குத் தெரியாதது அல்ல... ஆனல்... அந்தப் புனித இடத்தில் நுழைவதற்குரிய தகுதி எனக்குண்டா என்பதை எண்ணித்தான் வெட்கப்படுகிறேன் ...! வேதனைப்படுகிறேன்!..."

"அவ்வாறு எண்ணுதே! பிறரின் அழுக்கைத் துடைக்கும்போது தான் ஒருவனுக்குப் புனிதத் தன்மை உண்டாகிறது!... என் உயிருள்ளவரை உன்னைக் கைவிடமாட்டேன். நலிந்துபோன உன் வாழ்க்கைக்கு மறுமலர்ச்சியூட்ட முடிவு செய்துவிட்டேன்... ஆம்! உன்னை மணந்துகொள்வதென்று உறுதி செய்துவிட்டேன். இனி எவராலும் நம் திருமணத்தைத் தடுக்கமுடியாது..."

உணர்ச்சிக் கொந்தளிப்பில் முத்துக்குமரன் பேசிக்கொண்டே போனான். அப்போது அவனது அணைப்பிற்குள் சிக்கிக் கிடந்த அவளது உடல் துவண்டு நழுவியது. அறுந்து விழும் மலர்க்கொடியெனத் தரையில் விழுந்தது.

அவளது உடலை எடுத்து மடியில் கிடத்திக்கொண்டு அவன் அரற்றினான். தெளிவற்ற ஏதோ சில சொற்களை முணுமுணுத்துக்கொண்டே அவளது கடைசிமூச்சுப் பிரிந்தது.

பிணத்தைத் தரையில் கிடத்திவிட்டு பித்தனைப்போல எழுந்தான் முத்துக்குமரன். அவன் கண்கள் நாற்புறமும் சுழன்றன. அருகே சற்றுத்தொலைவில் யாராலோ சிறிது குடிக்கப்பெற்று மிகுதியிருந்த விஷமான வெள்ளெருக்கம் பால் உறைந்து கொண்டிருந்தது.

★

ஆசிரியருக்குக் கடிதம்

சென்னையில் உள்ள மந்திரிகள். கவர்னர் சட்டசபை மெம்பர்கள் சென்னையை காலி செய்துவிட்டு இங்கு நீலகிரியில் உல்லாசமாக, ஆனல் பயத்துடன் உலா வந்தார்கள்.

இந்த மந்திரிகளும், சட்டசபை மெம்பர்களும் வந்ததுதான் வந்தார்கள்: இந்நிலையில் கவர்னராவது சென்னையில் இருந்து தொலைப்பதுதானே?

5½ லட்சம் கொடுத்து ஆரன்மூர் மாளிகையை வாங்காமல் விட்டு, இங்குள்ள ராஜ பவனை எடுத்துக்கொண்டிருக்கலாம், இதனல் மாளிகை வாங்கிய பணம மிச்சம். வேலையற்ற கவர்னர் தேவையில்லாமல் இங்கு வருவதையாவது நிறுத்தியிருக்கலாம். அந்த வகையிலும் ஏராளமான பணம் மிச்சப் பட்டிருக்கும்.

பொதுநலம்
ஹோட்டல் ஆனந்த பவன்,
கூனூர் R. S.
நீலகிரி ஜில்லா.

புதிய விருந்து!
சுவைசொட்டும் படைப்பு!!
துள்ளி ஓடும் நடையில்
தோழர்
ப. உ. சண்முகம்
எம். எல். ஏ.
அளித்திடும்

'காதல்பரிசு'

★

காதல்-
சோகம்-
நட்பு-ஆகிய
உணர்ச்சிகளின்
கூட்டுக்கலவை!
சுவை குறையாத ஓவியம்!

★

அடுத்த இதழிலிருந்து
தொடர்ந்து
வெளிவரும்!

இளைஞர் காங்கிரஸ் எத்தப்பன் எழுதுவது!

அன்புள்ள மச்சான்,

முனிசிபல் தேர்தலிலே தோற்றதும் உடனே, நான் வாங்கிக் கொடுத்துவந்த கதர் வேட்டி-சட்டையையெல்லாம் கழற்றி, தங்கச்சி முகத்தில் எறிந்து, என்னையும் கன்னாபின்னாவென்று பேசியதாகக் கேள்விப்பட்டேன். நேருசாட்சியாக சத்தியம் செய்து சொல்கிறேன், நிற்பதற்கு ஆள் கிடைக்கவில்லை யென்பதால், உன்னை 'தாஜா' பண்ணி, நிற்கச்சொல்லவில்லை நான். கட்சியாவது! காமாட்சியாவது!! கருப்பட்டி-வீசை என்ன விலை, வெங்காயம் வீசை எத்தனை வேண்டும், என்று வியாபாரம் செய்துகொண்டிருந்த உன்னை, நான் நிற்கச்சொன்ன காரணம், என் மச்சானும் ஒரு முனிசிபல் கவுன்சிலர் என்று சொல்லிக்கொள்ளவேண்டும் என்கிற ஆசையினால்தான். சத்யமாகச் சொல்கிறேன், நம்பு. என்ன செய்வது? இந்தத் திமுககாரர்களால், என் ஆசை பலிக்கவில்லை. நீ சேர்த்து வைத்திருந்த பணம் பத்தாயிரமும் போய்விட்டதாகத் தங்கச்சி, எழுதியிருக்கிறது. ஜெஇந்த்! —எதையும் தாங்கும், இதயம் வேண்டும். வருத்தப்படாதே.

நீ இப்போது தோற்றுவிட்டாலும், பணத்தை இழந்துவிட்டாலும், நான் இளைஞர் காங்கிரஸ் கமிட்டியிலிருக்கிற வரையிலும் உனக்குக் கவலையே வேண்டாம். பத்து ஆண்டுகளாகப் பார்க்கிறாய்; நான் இன்னும் இளைஞர் காங்கிரசிலேதானே இருக்கிறேன்! "என்னடா, இளைஞர் காங்கிரஸ் என்றே சொல்லிக்கொண்டிருக்கிறாய். புஷ்கோட்டுக்குப் பதில், நம்ப ஊர் எம். எல். ஏ. போல நீ எப்போது இரு பக்கமும் பை வைத்த 'ஜிப்பா' போடப்போகிறாய்?" என்று நீ ஒரு முறை என்னைக் கேட்டதற்கு, என்ன சொன்னேன்? இதிலிருந்தால்தான் 'சான்சு' கிடைக்கும் என்று சொன்னேனல்லவா! முனிசிபல் தேர்தல்களிலே, காங்கிரசு தோற்றாலும் தோற்றது; எனக்கெல்லாம் சான்ஸ் அடிக்கும் போலிருக்கிறது!!

காங்கிரஸ் கட்சியென்றாலே மேலிடத்தில் நேருவும், பந்துவும், தேசாயும், இப்படி வயதாகிப்போன தலைவர்கள் பெயர்தான் ஞாபகத்துக்கு வரும். இங்கேயும், யார் காங்கிரஸ் தலைவர்கள் என்று நினைத்தால், உனக்கு உடனே காமராஜர், பக்தவத்சலம், சுப்பிரமணியம், கக்கன், இராசாராம் ஞாபகம்தான் வரும். இவர்களும் 50—60 என்று இருப்பவர்கள்தான். கட்சியும் கிழடு! தலைவர்களும் கிழம்!!—இது சரியல்ல என்று, பலத்த விவாதத்தை நான் கிளறிவிட்டிருக்கிறேன். பலிக்கும் என்று தெரியவருகிறது.

ஊட்டிக்குப் போன இடத்திலே நமது மந்திரிமார்களும் முக்கியஸ்தர்களும் அடிக்கடி, கூடிக்கூடிப் பேசினார்களாம். வேறு எதைப் பற்றிப் பேசப்போகிறார்கள்? தி. மு. க. வளர்ச்சி பற்றித்தான்! அப்போது சுப்ரமணியம் சொன்னதாகச் சொல்கிறார்கள் — அவர் தானே காமராஜ், பக்தவச்சலத்தை விடக் கொஞ்சம் இளமை — இளைஞர்களுக்கு, உற்சாகத்தை உண்டு பண்ண வேண்டும் என்று கொஞ்சம் காரசாரமாகக்கூடப் பேசிக்கொண்டார்களாம், நமது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வேலையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; முதலில் நாம் ஒரு மூன்றாண்டுத் திட்டமாவதுபோட்டு, காங்கிரசைக் காப்பாற்றவேண்டுமென்று! அதன் விளைவாக, தீவிரமாக, காங்கிரசிற்குள், இளைஞர்களைக் கொண்டு வருவது என்ற முடிவுக்கு வந்தார்களாம். முடிவுக்கு வந்துவிடலாம்! எந்த இளைஞன் காங்கிரசுக்குள் வருவான்?—என்று நீ, கேட்கலாம். நானும், 'பிரச்சாரப் பீரங்கி' . கரிச்சானும் கடிதங்கள் எழுதினோம், தலைவர்களுக்கு. துக்கமடைந்திருக்கிற நீ ஆறுதல் பெறட்டும் என்று, அக்கடிதங்களையும் இணைத்திருக்கிறேன். இது, ஸ்ரீஜத் கரிச்சான் அவர்கள் எழுதிய கடிதம்:

*

போனகோட்டை,
28—4—59.

இப்பவும், காங்கிரஸ் பீரங்கி' எதிர்க்கட்சிகளைத் தாக்கும் கோடரி, விடாமல் மூன்று மணி 38 நிமிடம் பேசி பிரைஸ் வாங்காமலிருக்கும் திக்கெல்லாம் மிரளும் சிங்கம், கரிச்சான் அவர்கள், காங்கிரசுத் தலைவர்களுக்கு எழுதிக்கொண்டது:

ஐயா!

பிரச்சாரம் சரியாக இல்லாததால்தான், காங்கிரஸ் கெட்டுக் குட்டிச்சுவராகிவருகிறது, என்று பேசினதாகக் கேள்விப்பட்டேன். கூட்டத்தில் பேசுகிற மாடலிலேயே உங்களைக் கேட்கிறேன்! குட்டிச்சுவராகிவிட்டதென்றால், அதற்குப் பக்கத்திலிருக்கும் நீங்கள் எல்லாம் யார்? (எப்படி, என் பேச்சுத் திறமை! தயவுசெய்து எல்லா மந்திரிகளுக்கும் இதைப் படித்துக் காட்டி, என்னைப்பற்றிச் சொல்லி வைக்கவும்!!) நிற்க. போனமாதம் மட்டும், நான் சுமார் 7½-கூட்டங்களில் பேசியிருக்கிறேன். இடையில் ஒன்று, வேதனையுடன் சொல்லிக்கொள்கிறேன். மாதம் முப்பது கூட்டங்களில் பேச நான் தயாராயிருந்தும், என்னைக் கூப்பிட்டுப் பேசவைக்க யாருமில்லை. மீதிநாட்களில், வீட்டிலேயே உட்கார்ந்து, ஒத்திகை பார்க்கவேண்டியிருக்கிறது. அதென்னடா, 7½-கூட்டங்கள் என்று கேட்கலாம். அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? ஒரு கூட்டத்தில் நான் பேசிக் கொண்டிருந்தபோது, நடுவிலேயே,

சென்னை உதவி மேயர்

தோழர்

திரு. சிவசங்கரன்

எல்லோரும் எழுந்துபோய்விட்டார்கள்! கூட்டம் நடத்தியவர்கள், என்னைப் பிடிவாதமாக முடித்துக் கொள்ளச் சொல்லிவிட்டார்கள். அதுமுதல், எந்தக் கூட்டத்தில் பேசப்போனாலும், இனிக் கண்களை மூடிக்கொண்டே பேசுவது என்கிற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

நிற்க. விஷயத்துக்கு வருகிறேன். கூட்டங்களில், பேசும்போது, கைதட்டி உற்சாகப்படுத்த யாரும் இல்லை. இது பெரிய வேதனையாக இருக்கிறது. உற்சாகப்படுத்துவோமே என்று உள்ளூர் காங்கிரசாரும், யாரையாவது பிடித்தாவது வைக்கலாமல்லவா? அப்படியும் செய்வதில்லை. இத்தொல்லைபோக, நான்ஒருயோசனை, சொல்கிறேன். நமது பிரச்சாரம் சரிவர நடக்கவேண்டுமானால், கூட்டங்கள் நிறைய நடக்கவேண்டும். கூட்டங்கள் நிறைய நடக்க, பொது மக்கள் கூடவேண்டும். பொது மக்கள் கூட, ஏதாவது ஒரு 'வித்தை' செய்யவேண்டும். அப்படிக் கூடிய மக்களிடம், நாங்கள் நன்றாகப் பேசுவதாக எண்ணி கைதட்டும் ஆட்கள் வேண்டும். இதற்கான ஏற்பாடுகளையெல்லாம் நீங்கள் தீர ஆலோசித்துச் செய்யுங்கள்!

ஒழிக. அறிவு! — நான் இப்படித்தான், தி. மு. க-க்காரர்களைப் பார்த்துச் சொல்வது வழக்கம். எப்படி என் தைரியம்?

தங்கள்,

கரிச்சான்.

*

மச்சான்! இந்தக் கடிதத்தோடு, நானும் ஒருகடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் இதோ:

*

எழவூர்

27—4—59

ஐயா!

இளைஞர்களை எப்படியும் காங்கிரசுக்குள் நிறையக் கொண்டுவர வேண்டும் என்று நீங்கள் ஆலோசிப்பதாகக் கேள்விப்பட்டேன். இப்போதாவது, நீங்கள் எல்லாம் கிழவர்களாகிவிட்டதை உணர்வது அறிந்து, மகிழ்கிறேன். கிழவர்களாகிய நீங்கள் இடத்தை அடைத்துக்கொண்டிருந்தால், எங்களுக்கு எப்படி ஊக்கம் பிறக்கும்? நானும் பத்து வருடமாக இளைஞர் காங்கிரசில் இருக்கிறேன். என்ன பிரயோசனம்? மேலும், இளைஞர்களைப் புதிதாகக் காங்கிரசுக்குள் சேர்க்கவேண்டுமென்றால், நாம் ஏதாவது செய்யவேண்டும், இப்போதுள்ள இளைஞர்கள், வேலையில்லாமலிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், மந்திரிப் பதவி கொடுக்கப்படும் என்று பகிரங்கமாக விளம்பரப்படுத்த வேண்டும். எல்லா இளைஞர்களுக்கும் எப்படி மந்திரிப்பதவி கொடுக்கமுடியும் என்று நீங்கள் யோசிப்பீர்கள். நான் சொல்வது என்னவென்றால், என்னைப் போலுள்ளவர்களுக்கெல்லாம், ஒரு மந்திரிப் பதவியைக் கொடுத்தால், பார்க்கின்ற இளைஞர்கள் எல்லாம், தாங்களும் மந்திரியாகலாம் என்றெண்ணி, அந்த ஆசையில் காங்கிரசுக்கு வரலாம். எப்படி என் யோசனை? எனக்கு வரும்பதிலில், மந்திரியாக 'அப்பாய்ண்ட்' பண்ணின, ஆர்டரும், வருமென்று எதிர்பார்க்கிறேன்.

இ. கா. எத்தப்பன்.

*

வந்திருக்கிறது, மச்சான்! விரைவில் மந்திரியானாலும் ஆவேன்—என்கிற அறிகுறி தரும்சேதி வந்திருக்கிறது!! 'இந்து' ஏட்டில், போட்டிருக்கிறார், நிருபர்.

எனது கடிதத்தைப் பார்த்தார்களோ, இல்லையோ, அறியேன். ஆனால், இளைஞர்களுக்கெல்லாம் துணை மந்திரி அல்லது பார்லிமெண்டரி செகரட்டரி இப்படி ஏதாவது அளித்து ஊக்கமூட்டவேண்டும்; அப்போதுதான் இளைஞர்கள் சேருவார்கள், என்று பேசிக்கொண்டார்களாம்.

இப்படியேதாவது கவர்ச்சிகரமாகச் செய்யாவிட்டால், இளைஞர் பட்டாளம் முழுவதும்' எதிர்க்கட்சிகள் வசமே போய்விடுமே!— எனவும் பேசிக்கொண்டார்களாம்.

வடபாதிமங்கலம், சாமியப்பா மகன், செட்டிநாட்டு 'ராஜா' இப்படிப்பட்டவர்களையெல்லாம் காங்கிரஸ் எப்படிப் பிடித்தது? பதவிகளைக் காட்டித்தானே! அதேபோல, இளைஞர்களையும் பிடிக்கலாம் என்று யோசனை!! எனவேதான் சொன்னேன், இளைஞர் காங்கிரசிலிருக்கும் எனக்கும் ஒரு சான்சு அடித்து, ஒரு மந்திரியானாலும் ஆகலாம்.

மந்திரியாக வந்து விட்டால், பிறகு நீ, மந்திரியின் மச்சான்! நான் நினைச்சா, எதுவும் செய்யமுடியும். ஆகவே, இப்போது போனமானம், பணம்பற்றிக் கவலைப்படாதே. சரி செய்ய நானிருக்கிறேன். ஆனால், ஒன்று! நான் எப்படியாவது எம். எல். ஏ. ஆனால்தான், இளைஞர் காங்கிரசின் சார்பில் மந்திரியாக முடியும். நாடு போகிற போக்கைப் பார்த்தால், அடுத்த தடவை, திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருக்கிற இளைஞர்கள், காங்கிரசை ஜெயிக்க விடுவார்களா?— என்று பயமாயிருக்கிறது. அதை நினைக்க நினைக்க, உடம்பெல்லாம் வியர்க்கிறது; பயமாயிருக்கிறது. மீதி, பிறகு எழுதுகிறேன். முதலில், சட்டையைக் கழட்டவேண்டும், தவறாக எண்ணாதே, வியர்வைக்காகத்தான் கழட்டுகிறேன்! இப்போது, எனக்கு, அடைக்கலம் தருவதே, கதர்ச் சட்டைதான்! அதைக் கழட்டுவேனா? தங்கச்சியிடம் சொல்லு, வரும்போது, நல்ல இங்கிலீஷ் வாயிலாக வாங்கி வருகிறேன்.

ஜே, இந்த்.

உன்,

இ. கா. எத்தப்பன்.

குறிப்பு:—இ. கா. என்றால், இளைஞர் காங்கிரஸ் என்று பொருள்.

செய்யுமா!

டாக்டர்களே,

நீங்கள் எல்லாம் வளர்ந்துவரும் விஞ்ஞான முறைப்படி மருத்துவ முறைகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். இந்த முறைகள், மிகமிக அவசியம்தான். அதே சமயத்தில், நீங்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது. இப்போதுள்ள முறைகள், நமது முன்னோர்களுக்குத் தெரிந்திருக்கவில்லையே தவிர, அவர்களும் நோய்களுக்குப் பற்பல விதமான மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்துகொண்டு இருந்தார்கள் என்பது உண்மை. அறுக்கவும், ஊசிபோடவும் அவர்கள் தெரிந்திருக்கவில்லை. ஆனால், மூலிகைகளையும் பச்சிலைகளையும் கொண்டு, பற்பல நோய்களுக்குச் சிகிச்சை செய்து வந்திருக்கிறார்கள். இப்போதும், அந்தப் பச்சிலை மூலிகை வைத்தியம், நமது நாட்டில் சில இடங்களில் இருக்கிறது. நாலாயிரம் ஆண்டுகளாக நம்மிடம் இருந்துவரும், இந்த மருத்துவ முறைகளையும், நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். முனிவர்களைப் போன்றவர்கள் கண்டு பிடித்துத் தந்துபோன, இந்த மூலிகை மருத்துவம், நவீன டாக்டர்களாகிய உங்களுக்கும் பயன்படும். ஆகவே, அவசியம், நீங்களெல்லாம் இதையும் கற்றுக்கொள்ள வேண்டும்''

*

சீன சர்க்கார், இவ்விதம், ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது தன்னாட்டு, டாக்டர்களுக்கு!

அழிந்துபோகும், மூலிகை மருத்துவத்தைத் தடுக்கவும்— அதே சமயம், டாக்டர்கள் என்போர் புது முறை வைத்தியங்களோடு இவைகளையும் அறிந்துகொள்ளவேண்டும் என்கிற அவசியத்தைப் பெறவும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது!!

வளர்ந்துள்ள உலகில், இன்றையதினம், வைத்தியத்துறையில் எவ்வளவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நமது மூதாதையர் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு, இன்று மருத்துவத்துறை முன்னேறியிருக்கிறது.

சீனத்தைப்போல, இங்கும் பழைமை மருத்துவர்கள் ஏராளம் இருக்கிறார்கள். அவர்கள் தரும் சூரணமும், பஸ்பமும். பல வியாதிகளை எளிதில் போக்கக்கூடியவையாகவே உள்ளன.

இருந்தும் ஏனோ, அந்த முறைகளும் வைத்தியமும் அழிந்துவிடும் அறிகுறி இருந்து வருகிறது! வெறுக்கும் மனநிலையும் வளர்ந்து வருகிறது!!

* * *

பொதுவாக நாட்டுமருந்து என்று கூறப்படுவன, சித்தவைத்தியம், யூனனி ஆயுர்வேதம் என மூன்றாகும். யூனனி உருதுமொழிக்கும், ஆயுர்வேதம் வடமொழிக்கும், சித்தவைத்தியம் தமிழ்மொழிக்கும் உரியவை.

ஆயுர்வேத மருந்து: பெரும்பாலும் அரிஷ்டமும் திராவகமுமாக இருக்கும்.

யூனனி: பெரும்பாலும், அல்வாவும் லேகியமுமாக இருக்கும்.

சித்தவைத்யம்: பெரும்பாலும் எண்ணெயும், கியாழமுமாக இருக்கும்.

சித்தர்கள், நம்நாட்டில் சிறந்த மருத்துவர்கள். அவர்கள் நுருவி ஆராய்ந்து கண்டுபிடித்துத் தந்ததே, சித்தவைத்தியம். மண்ணில், செடிகொடிகள் உண்டான நாள் முதல், இம்மருத்துவமும் ஏற்பட்டதெனலாம்.

சித்த மருத்துவக் கலைகளையும் கிளைகளையும், ஆயுர்வேதத்திலும் யூனனியிலும்காணலாம். தமிழரும் அராபியரும்வாணிபத்தால் ஒன்றுபட்ட காலத்திலேயே, தமிழ் மருத்துவம், அரபுநாடுகளுக்குச் சென்று அங்கிருந்து மேல் நாடுகளுக்கும் சென்றிருக்கிறது என்பர். மேல் நாட்டு மருந்துகளுக்குப் பயன்படும் சுக்கு, மிளகு, திப்பிலி முதலியன இவ்வுண்மையை இன்றும் மெய்ப்பிக்கின்றன.

தமிழகத்தில் 18 சித்தர்கள் இருந்ததாக பதினென் சித்தர் பாடல் தெரிவிக்கிறது. எனினும், பல சித்தர்கள் இருந்திருக்கவேண்டும். அவர்களில், பெரும்பான்மையானவர்கள் மருத்துவ முறைகளை வகுத்துக் கொடுத்தவர்கள்.

"மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"
"நீர் அருக்கி, மோர் பெருக்கி,
நெய்உருக்கி உண்போர்தம்
பேருரைக்கில் போமேபிணி"

என்றுள்ள மொழிகள், நோய் வாராமல் உடலை எப்படி வைத்திருப்பது என்பதைச் சொல்லுவனவாகும். நோய் நுழையாமல் உடல்திண்மையைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிவகைகளும், சித்த மருத்துவத்திலுண்டு.

உடலை சிறிதாக்குதல், பெரிதாக்குதல், பருவமாக்குதல், போன்ற கலைகளையும் சித்தர்கள் அறிந்திருந்தவராகச் சொல்லுவர்.

தங்கம் முதலிய உலோகங்களையும், பவளம் முதலிய மணிகளையும், பாஷாணம் என்ற நச்சுப் பொருளையும் நீற்று சாம்பலாக்கும் முறை சித்தவைத்தியத்தில் மிக எளிது. சித்த மருத்துவத்துக்கே தனி உரிமையுடையது இது.

சித்த மருத்துவத்தில், 'ஒத்தை மருந்து' என ஒருவகையிருக்கிறது ஒரு நோய்க்கு ஒரே மருந்து என்ற வரிசையில், வரும். இதுபோன்ற முறையினை, வேறு எங்கும் காண்பது அரிது.

'பாம்புக்கடிக்கு
வாழைப்பட்டைச் சாறு'
'பூரான் கடிக்கு,
வெல்லம் தின்னு'
'தேள் கடித்தால்,
நாயுருவி வேரைமென்று
சாறைக்குடி'
'மேகப்படைக்கு,
பேயவரைச் செடியை
வேரோடு பிடுங்கிவந்து
அரைத்துத் தடவு'

'நாசிக்குத்தலுக்கு,
மல்லிகைப்பூவை வைத்துக் கட்டு.'

இவை, தமிழ் மருத்துவம்! இப்படிப்பட்ட தமிழ் மருத்துவம், பல காரணங்களால், புழுதிமேடிட்டுக் கொண்டே வருகிறது! அறிந்தோர் செத்தால், அவர்களுடனேயே பல உண்மைகளும் போய்விடுவதுண்டு.

இப்படிப்பட்ட, நல்ல மூலிகைகளும், பச்சிலைகளும், நமது நாட்டில் உண்டு! அவைகளைக்கொண்டு இந்த மருத்துவக்கலை அழியாமல் நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

* * *

சீன சர்க்கார் அறிவித்துள்ளது போல, இந்த பழந்தமிழ் முறைகளையும், டாக்டர்களாக வருவோர் அறியும் வாய்ப்பு ஏற்படுத்துவது நல்லது.

பழைய மருத்துவ முறைகள் என்றாலே இன்று கேவலமாக எண்ணுவோர் உண்டு. நாகரிகம் பெற்றவர்கள் என்போர் மட்டுமல்ல, டாக்டர்களேகூட வெறுப்பதுண்டு.

இதனால், பழைய முறைகள் அத்தனையுமே நல்லவை என்று நாம் சொல்லவில்லை. அவைகளிலும், கெட்டவையும் உள்ளன.

அதனையும், நாம் வளர்க்கும் ஆற்றலைப் பெறவேண்டும். அப்போதுதான், அந்த மருத்துவக் கலையும் அழியாமல், பாதுகாக்கப்படும். சித்தவைத்தியம், யூனானி, ஆயுர்வேதம் ஆகியவைகளோடு இப்போது ஹோமியோபதி முறையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த முறைகள் யாவும், காலவேகத்தில், மண்மேடிட்டுப் போகாமல் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு, உணரப்படுதல் அவசியமாகும்.

அதேசமயம், பழந்தமிழ் மூலிகைகளைக் கொண்டு, மருந்துகள் செய்யும் வாய்ப்புகள் நமதுநாட்டில் ஏராளம் இருக்கின்றன. அவைகளைத் தேடியெடுத்து ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படவேண்டும்.

டில்லி அரசினர், மேநாட்டுமுறையில், இங்கேயே மருந்துகள் செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதன்படி, ரஷ்யாவின் உதவியோடு, ஐந்து இடங்களில் தொழிலகம் அமைக்கவிருக்கிறார்களாம். நோய் தடுப்பு மருந்துகள், மூலிகைகளிலிருந்து மருந்தெடுத்தல், சத்திர சிகிச்சை ஆயுத உற்பத்தி, இதுபோல பலவகைப்பட்டவைகளை உற்பத்தி செய்யத் திட்டம்போட்டு வைத்திருக்கிறார்கள். இதற்கென, அங்கே, தொழிலகங்களை அமைப்பது எனவும் யோசனை செய்துகொண்டிருக்கிறார்களாம்.

கடந்த ஏப். 3ந் தேதி சேலத்தில் கூடிய மாவட்ட வியாபார சபையினர் இந்த தொழிலகங்களில் ஒன்று ஏற்காட்டில் ஏற்படவேண்டுமெனத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

நோய் தடுப்பு மருந்துகளைச் செய்ய, ஏற்காடு, நல்ல இடமாகும். இந்த இடத்தில், இந்த மருந்தகம் ஒன்று ஏற்படச் சென்னை அரசு, டில்லியை வற்புறுத்தவேண்டும்.

அதே சமயம், பழைய மருத்துவ முறைகள் சாகாமல், அதனையும் பெருமைப்படுத்தும் வழிவகைகளை, இங்குள்ள அரசு ஆராய்தல் வேண்டும்.

வளரும் நாகரிகம்! இருப்பவைகளில் நல்லவை!!— இரண்டுக்கும், இடம் ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு, அரசுக்கு உண்டு. செய்யவேண்டும் என எதிர்பார்க்க உரிமையும் உண்டு மக்களுக்கு.

மே தினம்!

உழைப்போருக்கும், வாழ்வு வேண்டும் என்கிற உரிமை முழக்கம் கிளம்பிய நாள்!

உலகம் முழுதும், பாட்டாளிகள் உள்ள இடந்தோறும் சிறப்புறும் திருநாள்!!

தி. மு. க. ஒவ்வோராண்டும் கொண்டாடும் விழா நாள்.

☆

காலக்குறி, இலட்சிய ரேகைகளை வேகமாகப் பதித்துச் செல்கிறது.

ஏழை மேயராகும் காட்சி!

குனிந்தோர் நிமிர்கின்றனர்!

குவலய முழுதும், உரிமை நாதம், ஒவ்வோராண்டும் வளர்ந்து ஒலிக்கிறது.

☆

ஒவ்வொரு மே நாளும் நமது பாதையை விரைவாக்கட்டும்!

இலட்சிய சூரியன் எழ, உதவி புரியட்டும்!!

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.